வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

02.02.2021 செவ்வாய்க்கிழமை









06

சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதம்



09

மியன்மாரில் இராணுவ ஆட்சி



13

மெஸ்ஸியின் மதிப்பு ரூ. 11,775 கோடி



14

கிளிநொச்சியில் போராட்டம்

## ஜெனிவாவை கையாள்வது குறித்து தினேஷ் தலைமையில் குழு ஆராய்வு

### உறுப்பு நாடுகளுடன் விசேட கலந்துரையாடல்

கொழும்பு,பெப்.02

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையைக் கையாள்வது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான உயர் அதிகாரிகள் குழு ஒன்று கலந்துரையாடி வருகின்றது.

ஜனாதிபதி கோட்டாபயவின் ஆலோசனைக்கு அமைவாக செயல்பட்டு வரும் இந்தக் குழு, கொழும்பில் உள்ள ஜெனிவா மனித உரிமைச் சபையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடி வருவதாக கொழும்பு உயர்மட்ட அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

2015 ஆம் ஆண்டு நிறை 02

## இலங்கைக்கு இந்தியா அழுத்தம்

கொழும்பு, பெப். 02

2019ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை செயல்படும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாக அறிக்கை மூலம் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. 02

# இலங்கையின் உரிமைகள் மீறலை சர்வதேசம் புறக்கணித்து நடக்காது

## சுட்டிக்காட்டுகின்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

ஜெனிவா, பெப்ரவரி 02

"இறுதிப்போரில் பொதுமக்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள், கொலைகள், வன்புணர்வுகள் உட்பட ஏராளமான போர்க் குற்றங்களுக்கு அப்போதைய ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவும், அப்போதைய பாதுகாப்பு செயலாளரான கோட்டாபய ராஜபக்சவும் நேரடிப் பொறுப்புடையவர்கள். எனவே, இலங்கையின் மனித உரிமைகள் மீறலை உலகம் புறக்கணித்து நடக்காது என்பதை ராஜபக்ஷ அரசுக்கு நிரூபிக்கும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இம்முறை நிறைவேற்றப்படும் தீர்மானம் அமையவேண்டும்." 02

HUMAN RIGHTS WATCH



கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று பல்வேறு பகுதிகளில் எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

## யாழ். பல்கலைக்கழகத்தின் 5 மாணவர்களுக்கு தொற்று!

யாழ்ப்பாணம், பெப். 02

யாழ்.பல்கலைக்கழகத்தை சேர்ந்த 5 மாணவர்கள் உட்பட்ட ஆறு பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன்.

தொற்றுக்குள்ளான மாணவர்கள் இணைந்த விஞ்ஞான சுகாதார கற்கை நெறி பீடத்தை சேர்ந்தவர்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தொற்றுக்குள்ளான 02

### விளையாட்டு வினையானது!

## இளைஞனின் உயிரை பறித்தது

யாழ்ப்பாணம்,பெப். 02

தாயை மிரட்டுவதற்காக தனது உடலில் மண்ணெண்ணெயை ஊற்றியவர் அது காய்ந்து விட்டது என்று கருதி, பீடியை பற்ற வைத்தபோது தீப்பிடித்து எரிந்து உயிரிழந்தார். 02

## மியன்மாரில் இராணுவ ஆட்சி இலங்கைக்கு சிவப்பு எச்சரிக்கை

### மங்கள சமரவீர சுட்டிக்காட்டு

கொழும்பு,பெப்.02

மியன்மாரில் ஜனநாயக நிர்வாகத்தைக் கவிழ்த்து இராணுவத்தினர் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளமை இலங்கைக்கு விடுக்கப்படும் ஒரு சிவப்பு எச்சரிக்கை என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் தனது ருவிட்டர் பக்கத்தில் செய்தி ருக்கும் பதிவிலேயே மங்கள சமரவீர இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

அப்பதிவில் அவர் மேலும் தெரிவித்தவை 02

### கிழக்கு முனையம் விவகாரம்:

## எழுத்துமூல உறுதியளிக்க பிரதமர் மஹிந்த மறுப்பு!



கொழும்பு, பெப். 02

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் 100 வீதம் துறைமுக அதிகாரசபையின் கீழ் செயல்படும் என்று உறுதியளித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதனை எழுத்து மூலமான 02

## ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மதிப்பு அளிக்கவேண்டும் சு.க.

### சூடு வைத்தது பொதுஜன பெரமுன

கொழும்பு,பெப்.02

ஜனாதிபதி மற்றும் பிரதமர் எடுக்கும் தீர்மானங்களுக்கு மதிப்பளித்து செயல்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கற்றுக்கொள்ளவேண்டும்.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக இருந்து 02

## முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியே யாழ்.பல்கலையில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.02

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைக்கப்பட்டு வரும் நினைவுத் தூபி முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியாகவே அமைக்கப்படும் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உறுதிபடத் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி எனும் பெயரில் முன்னர் இருந்த அமைப்பிலையே தூபி மீளக் கட்டப்படும் என மாணவர் ஒன் றியப் 02

## ஜனாதிபதிக்கும்...

கொண்டு கடந்த அரசாங்கத்தில் செயல் பட்டதைப் போன்று தற்போது செயல் பட முடியாது. அரசியலில் ஓர் அணியாக இணைந்து செயல்படுவது அவசிய மாகும் என இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

தெவிநுவர பகுதியில் நேற்றுத் திங்கள்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நல்லாட்சி அரசாங்கத்தில் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற் பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டன. அப்போதைய காலகட்டத்தில் துறைமுக மற்றும் கப்பல்துறை அமைச்சராக பதவி வகித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க கிழக்கு முனை யத்தை விற்கும் யோசனைக்கு இடம ளிக்கவில்லை. இதனால் அவரிடமிருந்து அமைச்சுப் பதவியை பறித்து துறைமுக அமைச்சுப் பதவி பாராளுமன்ற உறுப்பி னர் மஹிந்த சமரசிங்கவுக்கு வழங்கப் பட்டது.

கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு மாத்திரமல்ல ஜப்பானுக்கும் வழங்கும் முயற்சியை கடந்த அரசாங்கமே முன் னெடுத்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை சார்பில் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் சாகர காரியவசம் கைச்சாத்திட்டார். கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்தவர்கள் தற்போது எதிர்க்கட்சியாக செயல்படுகிறார்கள். அன்று அமைதிகாத்து விட்டு இன்று தேசப்பற்றுள்ளோர் போன்று ஊடகங் கள் மத்தியில் கருத்துரைப்பது நகைப்புக் குரியது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலை மையிலான அரசாங்கத்தில் பல கட்சி கள் கூட்டணியமைத்துள்ளன. ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சியும் ஒரு பங்காளிக் கட்சி யாக செயல்படுகின்றது. ஜனாதிபதி மற் றும் பிரத மர் எடுக்கும் தீர்மானத்துக்கு மதிப்பளித்து செயல்பட சுதந்திரக் கட்சி முதலில் கற்றுக் கொள்ள வேண்டும். பங்காளிக் கட்சியாக இருந்து கொண்டு கடந்த அரசாங்கத்தில் செயல்பட்டதைப் போன்று தற்போது செயல்பட முடி யாது. அரசியல் கூட்டணி யமைத்தால் அனைத்து தரப்பினரும் கொள்கை ரீதியிலும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் - என்றார். (அ-எ)

## யாழ்....

வர்கள் காத்தான்குடி, கல்முனை, மூதூர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் ஆறாவது நபர் கம்பஹா மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் யாழ்ப்பாணம் வரும் போது சாவகச்சேரியில் வீதியில் மறித்து இவர் களிடம் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டன என்றும் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

## இளைஞனின்...

உரும்பிராய் கிழக்கை சேர்ந்த கோபாலசுந்தரம் கவிதாஸ் (வயது - 33) என்பவரே நேற்று உயிரிழந்தார்.

கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து அறிய வருவதாவது:

தாயாரோடு சண்டை பிடித்த குறித்த இளைஞர், தான் சாகப் போகிறேன் என்று கூறி மண் ணெண்ணெயை தனது உடல் முழுவதும் ஊற்றியுள்ளார். இதையடுத்து தாயார் அவரை சமாதானப்படுத்தியுள்ளார்.

சிறிது நேரம் கழித்து உட லில் இருந்த மண்ணெண்ணெய் காய்ந்து விட்டது என்று கரு திய அவர் பீடியைப் பற்ற வைத் துள்ளார். அச்சமயம் அவரின் உடலில் தீ பரவியது. அவரின் அபயக் குரலைக் கேட்டு அயல வர்கள் அவரைக் காப்பாற்றி யாழ். போதனா மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்ப்பித்தனர்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்தார். (ஐ-3)

## இலங்கையின்...

- இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள 93 பக்கங்களைக் கொண்ட அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

'திறந்த காயங்கள் மற்றும் பெருகி வரும் பேராபத்துக்கள்: கடுமையான துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்புக்கூற லைத் தடுக்கும் இலங்கை' என்ற தலைப் பில் ஐக்கிய அமெரிக்கா, நியூயோர்க் கைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப் பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இலங்கையில் பாதிக்கப்பட்டவர் களுக்கு நீதி நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கையை வழங்கும் விதமாக ஐ. நாவின் தீர்மானம் அமைய வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர் வில் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச குற்றங்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் வகையிலும், தற்போது நடைபெற்று வரும் துஷ்பிரயோகங்களைக் கண்டிக் கும் வகையிலும் குறித்த தீர்மானம் அமைய வேண்டும்.

இலங்கையின் மனித உரிமைகள் மீறலை உலகம் புறக்கணித்து நடக்காது என்பதை ராஜபக்ஷ அரசுக்கு நிரூபிக்கும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இம்முறை நிறைவேற்றப்படும் தீர்மானம் அமைய வேண்டும்.

இலங்கை அரசின் நீதி மீதான தாக்குதல்கள் இன்றும் எதிர்காலத்திலும் மனித உரிமைகள் மீறலை அதிகரிக்கும் அபாயத்தைக் காட்டுகின்றது.

இலங்கையில் இறுதிப் போரின் போது, பொதுமக்களைப் பாதுகாக்கும் ஐ.நாவின் நெறிமுறை சார்ந்த தோல்வி அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மீதான கண்மூடித் தனமான தாக்குதல்கள், கொலைகள், கற்பழிப்புகள் உட்பட ஏராளமான போர்க்குற்றங்களுக்கு அப்போதைய ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவும், அப்போதைய பாதுகாப்பு செயலாள ரான கோட்டாபய ராஜபக்ஷவும் நேரடிப் பொறுப்புடையவர்கள்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ச, போர்க்குற்றங்கள் உள்ளிட்ட பாரதூர மான குற்றச்சாட்டுக்கள் உடைய அதி காரிகளைப் பதவிகளுக்கு நியமித்த தோடு, உண்மை, நீதி மற்றும் பொறுப் புக்கூறல் போன்றவற்றை மறுத்து வருகின்றார். இலங்கையின் ஊடகங்கள் சுய தணிக்கையோடு செயற்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இலங்கை மீது இம்முறை கடுமையான தீர்மானத்தை நிறைவேற்றத் தவறுவது, உலகெங்கிலும் உள்ள அநியாயக்காரர் களுக்கு மோசமான செய்திகளைக் கொண்டு செல்லும் - என்றுள்ளது.

## இலங்கைக்கு...

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் நேற்று மாலை இந்திய உயர்ஸ் தானிகராலயம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதி லேயே இவ்வாறு குறிப் பிடப்பட்டுள்ளது.

2019 மேயில் இலங்கை, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளிடையே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் கைச்சாத்தான ஒப்பந்தத்தின்படி இலங்கை செயல்படும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது.

இது தொடர்பில் இலங்கை அரசாங் கத்தின் அர்ப்பணிப்பு பல்வேறு சந்தர்ப் பங்களில் வெளிப்படுத்தப்பட்டது. நாட்டின் தலைமை அது தொடர்பில் அறிவித்திருந்தது .வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் இணைந்து இதனை நடைமுறைப்படுத்து வதற்கு இலங்கையின் அமைச்சரவை கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் தீர்மானித்தது. இதற்கமைய, ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அனைத்து தரப்பினரும் ஏற்கனவே ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் செயல்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## எழுத்து...

உறுதியாக வழங்க மறுத்து விட்டார்.

எனினும், எழுத்துமூலமான உறுதிப்பாட்டை வழங்குமாறு கிழக்கு முனையத்தை பாதுகாக்கும் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை வலியுறுத்தி யுள்ளது.

கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் உரிமை மற்றும் கட்டுப் பாட்டை வெளிநாட்டிற்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள் வதாக தெரிவித்து கிழக்கு முனையத்தை பாதுகாக்கும் தொழிற்சங்கக் கூட்ட மைப்பு எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிழக்கு முனையத்தை பாதுகாக்கும் தொழிற்சங்கத்தினரை நேற்று அலரி மாளிகையில் சந்தித்துப் பேசினார்.

இதன்போது, உள்ளூர் வளங்களை விற்பனை செய்தவதைத் தவிர்க்கும் தற் போதைய அரசாங்கத்தின் கொள்கையின் கிழக்கு முனையத்தை எந்தவொரு நாட்டிற்கும் விற்பனை செய்யவோ அல்லது கட்டுபாடு வழங்கப்படவோ மாட்டாது. அது 100 வீதம் துறைமுக அதிகாரசபையின் கீழ் செயற்படும் நிறுவ னமாக தொடர்ந்தும் செயல்படும் என்றும் தெரிவித்தார்.

இதன்போது, சம்பந்தப்பட்ட துறைக்கு பொறுப்பான அமைச்சர் ரோஹித் அபேகுணவர்தன இது குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

எனினும், அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை சர்வதேச நிறுவனத்திற்கு முன்வைக் கும்போது குறித்த விடயங்களுக்கு அந்த நிறுவனம் உடன்படாமையினால் கிழக்கு முனையத்தை 100 வீதம் துறை முக அதிகாரசபையின் கீழ் செயற்படும் நிறுவனமாக்குவது குறித்த அமைச்சர வைப் பத்திரம் அமைச்சரவையில் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை ஏற்ற தொழிற் சங்கத்தினர், சட்டப்படி வேலை செய் யும் செயல்பாட்டை இன்று முதல் கைவிட ஒப்புக் கொண்டனர். அத்து டன், துறைமுகத்தின் கிழக்கு முனையம் அந்நியர்களுக்கு வழங்கப்படமாட்டாது என்பதை உறுதியளித்து எழுத்து மூல மான ஆவணத்தை தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால், தனது 50 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் தொழிற்சங்கங் களினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பலவற்றை தாம் தீர்த் துள்ள போதிலும், அது குறித்து எழுத்து மூலமான ஆவணமொன்றை இதுவரை வழங்கியதில்லை என்றும், தாம் வாக்குறுதியளித்தால் அது அவ்வாறே நிறைவேற்றப்படும்.

பிரதமர் என்ற வகையில் நான் முன் னெடுக்கும் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை அவ்வாறே செயற் படுத்துவதற்கு அரச அதிகாரிகள் கடமைப்பட்டுள்ளனர். நான் மேற் கொள்ளும் தீர்மானங்கள் கலந்துரை யாடல்களுடன் மட்டுப் படாது அவை செயல்படுத்தப்படும் என்று பிரதமர் இதன்போது தெரிவித்தார். (அ-ஐ)

## மியன்மாரில்...

வருமாறு:

சிவில் மற்றும் நிர்வாக அதிகாரங் களை இராணுவத்தினர் தமது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவரும் போது மக்கள் ஆணைக்கு வலுச்சேர்க்கின்ற தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் நீதித்துறை ஆகியவற்றின் செயல்பாடு களை முடிவிற்குக்கொண்டு வருவதற்கு அவர்கள் முற்படுவதைத் தவிர்க்க முடியாது.

இது மியன்மாரில் இருந்து இலங் கைக்கு விடுக்கப்படும் ஒரு சிவப்பு எச்ச ரிக்கையாகும்" - என்று குறிப்பிட்டுள் ளார். (அ-எ)

## ஜெனிவாவை...

வேற்றப்பட்ட 30/1 தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதில் இருந்து இலங்கை அரசாங்கம் விலகி யுள்ள நிலையில், எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைச் சபை யின் அமர்வில் எடுக்கப் படவுள்ள தீர்மா னம் தொடர்பாகவே குறித்த உயர் அதி காரிகள் குழு ஆராய்ந்து வருகின்றது.

ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதுவர் கொழும்புக்கு வருகை தந்து வெளியுறவு அமைச்சர் தினேஷ் குண வர்த்தன உள்ளிட்ட உயர் அதிகாரிகள் குழுவுடன் கலந்துரையாடியதாகவும் வெளியுறவு அமைச்சின் தகவல்கள் கூறுகின்றன. அத்துடன் மார்ச் மாதம் ஜெனிவா வுக்குப் பயனம் செய்யவுள்ள குழுவில், ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் செயலாளர் மற்றும் நிபுணத் துவம் பெற்ற இலங்கை இராஜதந்திரி களை அனுப்புவது குறித்தும் ஆலோசிக் கப்படுகிறது. இதேவேளை, ஜனாதிபதி கோட்டா பய நியமித்துள்ள உள்ளக விசாரணைக் குழுவுக்குத் தேவையான சர்வதேச தொழில் நுட்ப உதவிகளை மாத்திரம் ஜெனிவா மனித உரிமைச் சபையிடம் கோரவுள்ளதாகவும் உள் ளகத் தகவல்கள் கூறுகின்றன. (அ-எ)

## முள்ளிவாய்க்கால்...

பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதைவிடுத்து அமைதித் தூபி எனும் பெயரிலோ அல்லது வேறு வடிவங்க ளிலோ தூபியை அமைக்க அனுமதிக்க மாட்டோம் என அவர்கள் குறிப்பிட் டுள்ளனர். யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் இருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி சட்ட விரோதமானது எனக்கூறி கடந்த 8 ஆம் திகதி அது துணைவேந்த ரால் இடித்தழிக்கப்பட் டது. இதன் பின்னர் மாணவர்களின் தொடர் போராட்டங்களால் தூபிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில், தூபி விவகாரத் தில் நடைபெற்ற விடயங்களை விலாவரி யாகக் குறிப்பிட்டு துணைவேந்தர் சிறி சற்குணராஜா அறிக்கை சமர்ப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து தற்போது அமைக்கப்படவுள்ள தூபியினை அமைதி தூபி எனும் பெயரில் அமைக்க பேரவை அனுமதியளித்துள்ள நிலையில் மாணவர் ஒன்றியம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (அ-எ)

## பொத்துவில்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களில் நிலைகொண்டு அத்துமீறிய குடியேற்றங்களை தடுத்து நிறுத்தி, வடக்கு-கிழக்கை தமிழ் மக்க ளது பூர்வீக தாயகபூமி என்றவகை யில் உறுதிசெய்திருந்தனர். ஆனால், இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தற் போது அரசியல் ரீதியாக பிரிந்துள்ள நிலையில், முன்னெப்போதும் இல்லாத வாறு அத்துமீறிய குடியேற்றங்கள் இடம்பெற்றுவருவதையே அவதானிக்க முடிகின்றது. அகழ்வாராய்ச்சிக் கென தேர்ந் தெடுக்கப்படுகின்ற புராதன பிர தேசங்கள் மாத்திரமல்ல, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கால்நடை வளர்ப்போரின் மேய்ச்சல்தரை நிலங்கள் கூட குறிவைக்கப்படுவதையும் அவதா னிக்க முடிகின்றது.

இதன்மூலம் வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற பெரும் பான்மையான தமிழ் பேசும் மக்களையும் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதை நிராகரிக்கும் பாணி யிலும், அவர்களுக்கேயுரிய பாரம்பரிய நிலங்கள் அவர்களுக்கு உரித்துடைய வையல்ல என்ற வகையிலுமே தற்போ தைய அரசின் அனுசரணை யோடு நடக் கின்ற நடவடிக்கைகள் விளங்குகின்றன.

கிழக்கில் சூரியன் உதயமாகின்றது. இவ்வகையில், நாளையதினம் வடக்கு- கிழக்கு மக்களிடையே ஒரு புதிய இணைப்பை ஏற்படுத்துகின்ற நடவடிக் கையாக, பொத்துவில் முதல் பொலி கண்டிவரையிலான வாகனப் பேரணி உதயமாகின்றது என்று கருதலாம்.

ஈழநாடு
Eelanadu
02.02.2021 செவ்வாய்க்கிழமை
சார்வரி, தை 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

## இராணுவப் பயிற்சிக்கான ஆதரவு

விக்னேஸ்வரன் அவ்வப்போது தெரிவித்துவரும் கருத்துக்கள் சர்ச்சைகளை ஏற்படுத்துவதுண்டு. வரவு செலவுதிட்டத்தின்போது, வாக்களிப்பில் கலந்துகொள்ளாமைக்கு - எதிர்ப்பு அரசியலால் பயனில்லையென்று அவர் பதிலளித்திருந்தார். இதனால் அவரது கூட்டணிக்குள்ளும் அவரது ஆதரவாளர்கள் மத்தியிலும் அதிருப்திகள் உருவாகின. அண்மையில், மூன்று கட்சிகளும் கூட்டாக, மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பிவைத்த ஆவணத்தில் கையெழுத்திடுவது தொடர்பில் சர்சையொன்று உருவாகியிருந்தது. தங்களுடன் கலந்துரையாடாமல் விக்கினேஸ்வரன் தன்னிச்சையாக செயற்படுகின்றார் என, மீண்டும் அவரது கூட்டணிக்குள் சலசலப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. தற்போது, விக்னேஸ்வரன் மீண்டுமொரு சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றார்.

அண்மையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத்வீரசேகர, 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் இராணுவ பயிற்சியளிப்பது தொடர்பில் பரிசீலித்துவருவதாக தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து அது தொடர்பில் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்த கருத்துக்கள், மீளவும் அதிருப்திகளையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

அதாவது, இளைஞர்களுக்கு இராணுவ பயிற்சியளிப்பதை தான் எதிர்க்கவில்லை. ஆனால், தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு, முன்னாள் போராளிகள்தான் இராணுவப்பயிற்சியை வழங்கவேண்டுமென்று தெரிவித்திருக்கின்றார். இதனை அட்மிரல் சரத்வீரசேகர வரவேற்றிருக்கின்றார். வடக்கு மாகாண முதலமைச்சராக இருக்கின்றபோது, விக்னேஸ்வரன் இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தார். வடக்கு கிழக்கில் இராணுவம் தேவையற்ற வகையில் நிலைகொண்டிருக்கின்றது; எனவே, இராணுவத்தை வெளியேற்ற வேண்டுமென்று தொடர்ச்சியாக கூறிவந்திருக்கின்றார். அவ்வாறான ஒருவர், அட்மிரல் ஒருவர், இராணுவ பயிற்சி வழங்கப்போவதாக கூறுகின்ற போது, அதனை வரவேற்று, அதற்கு புதிய விளக்கமளித்திருக்கின்றார்.

விக்னேஸ்வரன் தொடர்பில் ஆரம்பத்தில் பலரும் நம்பிக்கையுடனிருந்தனர். விக்னேஸ்வரன் தலைமையில் கூட்டமைப்புக்கு மாற்றான தலைமையொன்றை உருவாக்க முடியுமென்றே அவ்வாறானவர்கள் நம்பினர். இதற்கு அவரது ஜனவசிய தோற்றமும், அவரது நீதிபதி அந்தஸ்துமே முக்கிய காரணம். ஆனால், கடந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் விக்னேஸ்வரன் தொடர்பான நம்பிக்கையில் முதலாவது கீறலை ஏற்படுத்தியது. ஏனெனில், பலரும் எதிர்பார்த்தது போன்று விக்னேஸ்வரன் தரப்பு, தேர்தலில் குறிப்பிடத்தக்க வெற்றியை பெற்றிருக்கவில்லை.

இது அவரது கூட்டணிக்குள்ளும் ஏமாற்றத்தையே ஏற்படுத்தியிருந்தது. ஆனாலும், விளிம்புநிலையில் விக்னேஸ்வரன் பெற்றுக்கொண்ட வெற்றி, அவர் பாராளுமன்றம் செல்ல வேண்டுமென்று எண்ணியவர்களுக்கு ஓரளவு ஆறுதலை கொடுத்திருந்தது. இந்த பின்புலத்தில், விக்னேஸ்வரனை முன்வைத்து ஒரு பலமான மாற்றுத் தலைமையை உருவாக்க முடியுமென்னும் நம்பிக்கை முற்றிலுமாக வீழ்சியுற்றிருக்கவில்லை. ஆனாலும், விக்கினேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினரான பின்னர் அவர் அவ்வப்போது வெளிப்படுத்திவரும் அபிப்பிராயங்களோ, அவர் தொடர்பில் எஞ்சியிருந்த சிறிய நம்பிக்கையையும் கொஞ்சம் கொஞ்சமாக நீர்த்துப் போகச் செய்துவிட்டதாகவே தெரிகின்றது.

கூட்டமைப்புக்குள் உட்கட்சி ஜனநாயம் இல்லையென்று கூறியே, விக்னேஸ்வரன் புதிய கட்சியொன்றை உருவாக்கியிருந்தார். ஆனால், அவரது புதிய கட்சிக்குள்ளும் ஜனநாயகத்தை தேடவேண்டிய சூழ்நிலை தற்போது ஏற்பட்டிருக்கின்றது. விக்னேஸ்வரனை ஆதரித்தவர்கள் பலரும், இதனை விட கூட்டமைப்பே மேல் என்று கூறுமளவிற்கு இன்று நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக தெரிகின்றது. அரசியலில் புதிய கட்சிகளை உருவாக்குவதல்ல முக்கியமானது, கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் கெட்டியாக பற்றிக்கொண்டு, முன்நகர்வதே முக்கியமானது.

# பொத்துவில் முதல் பொலிகண்டி வரை!



- அலசுவது **இராஜதந்திரி** -

இனரீதியாக வடக்கு-கிழக்கில் இடம்பெறும் அடாவடித்தனங்கள், அடக்குமுறைகள் என்பவற்றை கண்டித்து கிழக்கே அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்திலிருந்து வடக்கே வடமராட்சியின் பொலிகண்டிவரை நாளை புதன் கிழமை வாகனப் பேரணியொன்று இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் குறிப்பாக, அகழ்வாராய்ச்சி என்ற ரீதியல் வடக்கு கிழக்கில் பாரம்பரிய வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்கள் அத்துமீறல்களுக்குள்ளாகி, வரலாற்று ரீதியான தடயங்கள் அழிக்கப்படும் அபாயம் அல்லது புதிய திரிபுபடுத்தப்பட்ட ஆதாரங்களை தமிழர் பிரதேசங்களில் திணிக்கின்ற நிலை என்பவை தோற்றம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இந்த அத்துமீறல் மற்றும் அடாவடித்தனமான நடவடிக்கைகளில் புத்த பிக்குமாரே முன்னிலையில் நின்று வருவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. நாளைய தினம் இடம்பெறவுள்ள இந்த வாகனப்பேரணி பொத்துவிலில் ஆரம்பித்து எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை யாழ் குடாநாட்டின் வடமராட்சி பிரதேசத்திலுள்ள பொலிகண்டியில் நிறைவடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வாகனப் பேரணி**

அகழ்வாராய்ச்சி திணைக்களம், வன ஜீவராசிகள் மற்றும் வனபாதுகாப்பு திணைகளம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் ஊடாக வடக்கு-கிழக்கில் அத்துமீறிய குடியேற்றங்களை மேற்கொள்வதோடு, அடாவடித்தனமான முறையில் பௌத்த மதமயமாக்கலையும் தடுத்து நிறுத்தக்கோரி இந்த வாகனப்பேரணி நடத்தப்படவுள்ளது.

வடக்குக்கும் கிழக்கிற்கும் இடையே நாளையதினம் இடம்பெறவுள்ள வாகனப் பேரணி செல்லவிருக்கின்ற பாதை இந்த இரு மாகாணங்களிலும் தமிழர்களது பூர்வீக தாயக பிரதேசங்கள் ஊடாக செல்கிறது. பன்னெடுங்காலமாகவே ஆண்டு தோறும் ஜூலை மாதத்தில் வடக்கே தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பிக்கின்ற கதிர்காம பாதயாத்திரை, தெற்கே கதிர்காம திருத்தலத்தை வடக்கு-கிழக்கின் கரையோரங்கள் ஊடாக சென்றடைகின்றது. ஏறத்தாள இருமாத காலங்கள் இக்கதிர்காம பாதயாத்திரை இடம்பெறுகின்றது.

ஆனால், நாளை பொத்துவிலிருந்து வடக்கே பொலிகண்டிவரை இடம்பெறவுள்ள வாகனப்பேரணி வடக்கு நோக்கியதாகவும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழர்களது பாரம்பரிய பிரதேசங்களை வரையறை செய்வதாகவும் இருக்கின்றது.

**காகித ஆலை**

வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை மிகவும் அபரிமிதமான வளங்கள் இம் மாகாணங்களில் காணப்படுகின்றன. கிழக்கே காகித தொழிற்சாலை வாழைச்சேனைப் பிரதேசத்தில் வெற்றிகரமாக இயங்கியதோடு, ஏராளமானோருக்கு வேலைவாய்ப்புகளும் கிடைத்திருந்தன. இதுதவிர, வடக்கு - கிழக்கின் பொலிகண்டி முதல் பொத்துவிர் வரையிலான கடலோரப் பிரதேசங்கள் கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு பிரபலம் பெற்றவையாக இருக்கின்றன. இதேவேளை, வடக்கு - கிழக்கின் கடலோரப்பகுதிகள் பொலிகண்டி முதல் பொத்துவில் வரை மேம்படுத்தப்படும் பட்சத்தில், இக்கரையோர பிரதேசங்களை உல்லாசப் பயணத்துறைக்குரிய உல்லாசபுரிகளாகவும் மாற்றியமைக்கமுடியும்.


வடக்கு-கிழக்கு மக்களைப் பயன்படுத்தியே இந்த இரு மாகாணங்களினதும் அபரிமிதமான வளங்களை அரசு அபிவிருத்தி செய்யும் பட்சத்தில், இன நல்லுறவையும் நல்லமுறையில் பேணமுடியும். இதைவிடுத்து, பௌத்த மதவாதிகளை முன்னிறுத்தி வடக்கு - கிழக்கு மாகாணங்களது தனித்துவங்களை சீர்குலைக்க அரசு மேற்கொள்கின்ற நடவடிக்கைகள், நல்லிணக்கத்தோடு தமது பாரம்பரிய பிரதேசங்களையும் பாதுகாக்கவேண்டுமென்ற எதிர்பார்ப்போடு இருக்கின்ற வடக்கு-கிழக்கு மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையே அளிக்கின்றது.

**வடக்கு - கிழக்கு இணைப்பு**

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி வடக்கும் - கிழக்கும் ஒன்றிணைந்த மாகாணமாக இந்திய அரசின் ஆதரவோடு உருவாக்கப்பட்டபோதிலும், இந்த இணைப்பு நீடித்து நிலைத்திருக்கவில்லை. இந்திய அமைதி காக்கும் படையினர் வடக்கு - கிழக்கு

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# கம்பஹா, களுத்துறை மாவட்ட பாடசாலைகள் பெப். 15 திறப்பு

கொழும்பு, பெப். 02

கம்பஹா மாவட்டத்தில் 590 பாடசாலை களில் 589 பாடசாலைகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு திறக்க வாய்ப்பு காணப்படுவதாகக் கல்வி அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கம்பஹா மாவட்டத்தில் 4 கல்வி வலயங்கள் உள்ளதாகவும், இதில் கம்பஹா வலயத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக் கள் திறக்கக்கூடிய நிலையில் உள்ளன.

மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டால் அதிபரின் விருப்பத்தின்படி வகுப்புக்களை இரண்டாகப் பிரித்து வார நாட்களில் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, களுத்துறை மாவட்டத்தில் 446 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் 442 பாடசாலைகள் திறக்கக்கூடிய நிலையில் உள்ளன என களுத்துறை மாவட்டத்தின் பிரதேச ஒருங்கிணைப்பு குழு அறிவித்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்தார்.

# இ.போ.சவின் வடக்கு பிராந்திய முகாமையாளர் சர்ச்சைக்கு தீர்வு

## முடிவுக்கு வந்தது போராட்டம்

யாழ்ப்பாணம்,பெப். 02

**இ.போ.ச வடபிராந்திய முகாமையாளராக நியமனம் வழங்கப்பட்ட குணபாலச் செல்வத்தின் நியமனம் தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சிகளை அடுத்து சுமுகமான தீர்வு கிடைக்குமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.**



நேற்று போராட்டத்தை முன்னெடுத்த போக்குவரத்துச் சங்க ஊழியர்கள் மத்தியில் அமைச்சரின் பிரதிநிதிகள் இந்த உறுதிமொழியை வழங்கியதை அடுத்து பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது.

முன்பதாக வடபிராந்திய முகாமையாளராக அண்மையில் நியமனம் செய்யப்பட்டிருந்த குணபாலச்செல்வம் நேற்று பதவியேற்க இருந்த நிலையில் அந்த நியமனம் இரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இ.போ.ச தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்திருந்தன. அத்துடன் இந்த விடயத்தை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு சென்ற வடபிராந்திய போக்குவரத்து தொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதிகள், தமக்கான நியாயத்தைப் பெற்றுத்தருமாறு வலியுறுத்தியிருந்தனர்.

இந்நிலையில் துறைசார் அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்புகளை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதற்கான தீர்வை சுமுக மாக வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அமைச்சரின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் கோண்டாவில் சாலைக்குச் சென்று போராட்டத்தை முன்னெடுத்த ஊழியர்களுடன் கலந்துரையாடியதுடன் அது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் தெரியப்படுத்தியிருந்தனர்.

அத்துடன் ஊழியர்களின் நன்மை கருதி அவர்களது விருப்புகளுக்கு ஏற்றவாறான தீர்வே காலக்கிரமத்தில் பெற்றுத்தரப்படும் என்றும் அமைச்சரது பிரதிநிதிகளால் போராட்டகாரர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

மீசாலையைச் சேர்ந்த செல்லத்துரை குணபாலச்செல்வம், இலங்கை போக்குவரத்துச் சபையில் நீண்ட கால சேவை புரியும் அனுபவமிக்கவர்.

அத்துடன் கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் அவர் யாழ்ப்பாணம் சாலை முகாமையாளர் பதவியிலிருந்து கொழும்புக்கு மாற்றப்பட்டார். மும்மொழித் திறமையுடைய அவர், கடந்த காலங்களில் பல ஊழியர்களின் பதவி நிலை பிரச்னைகளை சீர் செய்து வழங்கியிருந்தார். இந்த நிலையில் செல்லத்துரை குண பாலச்செல்வத்துக்கு, வடபிராந்திய பிரதான முகாமையாளராக நியமனம் வழங்கப்பட்டது. அத்துடன் அவருக்கான உரிய நியமனக் கடிதத்தை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியிருந்தார்.

இந்நிலையில் அவரது பதவி திடீரென இடைநிறுத்தப்பட்டதை எதிர்த்து வடபிராந்தியத்தின் 7 சாலைகளினதும் தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் காலை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேரில் சந்தித்து அவரது நியமனத்தை உறுதி செய்யுமாறு வலியுறுத்தினர்.

அத்துடன் அவரது நியமனத்தை நிறுத்தினால் வடபிராந்தியத்தின் 7 சாலைகளின் ஒன்றிணைந்த தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தெரிவித்திருந்தனர். எனினும் நியமனம் நிறுத்தப்படாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரி - 2
02-பெப்-2021 செவ்வாய்க்கிழமை
நல்ல நேரம் : 7.30 - 9.00
எமகண்டம் : 9.00 - 10.30
திதி : பஞ்சமி

## இன்றைய ராசிபலன்

02.02.2021

**மேடம்** சுபச் செலவு ஏற்படும் நாள். துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பணிநீக்கம் செய்யப்பட்ட நிலை மாறி மீண்டும் பணியில் சேரும் வாய்ப்புகிட்டும்.

**இடபம்** குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும் நாள். கூடஇருப்பவர்களின் ஒத்துழைப்பு உண்டு. மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆதாயம் தரும் தகவல் வரலாம்.

**மிதுனம்** வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் நாள். வரவு திருப்தி தரும் என்றாலும், விரயம் இரு மடங்காகலாம். சுபகாரியம் முடிவாவதற்கான அறிகுறி தோன்றும்.

**கடகம்** உறவினர்களின் உதவி கிட்டும் நாள். தொழில் முயற்சி வெற்றி பெறும். பணத்தேவைகள் பூர்த்தியாகலாம். கடன்பிரச்சினைகள் கட்டுக்குள் இருக்கும்.

**சிம்மம்** தள்ளிச் சென்ற காரியம் தானாக முடிவடையும் நாள். புகழ் மிக்கவர்களின் சந்திப்பால் பொருள் வரவிற்கு வழி. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும்.

**கன்னி** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். எதையும் உடனடியாக முடித்துக் காட்டுவீர்கள். ஆசைப்பட்ட பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு.

**துலாம்** ஆதாயமில்லாத அலைச்சல் ஏற்படும் நாள்.எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**விருட்சிகம்** முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள். புகழ் மிக்கவர்கள் புதிய பாதை அமைத்துக் கொடுப்பர். நல்ல தகவல் நாடி வந்து சேரும். தொழில் முயற்சி பலன் தரும்.

**தனுசு** தேவைகள் பூர்த்தியாகும் நாள். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். தொழில் வளர்ச்சி திருப்தி. வருமானம் இருக்கும். வரன்கள் தேடி வரும்.

**மகரம்** நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவிற்கு வரும் நாள். மதியத்திற்கு மேல் மனக்குழப்பம் அகலும். தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்களின் உதவி .

**கும்பம்** விரயங்கள் அதிகரிக்கும் நாள். வீடு மாற்றம், பற்றிச் சிந்திப்பீர்கள். தன்னம்பிக்கை குறையும். உத்தியோகத்தில் சலுகைகள் இல்லை என்று கவலைப்படுவீர்கள்.

**மீனம்** நண்பர்கள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும் நாள். ஆலோசனை சமயத்தில் கைகொடுக்கும். உறவினர்கள் உங்கள் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பர்.

# அதிபர் வேண்டாம் என்று மாணவர்கள் போராட்டம்

வவுனியா, பெப். 02

வவுனியா செட்டிகுளம் கோட்டத்துக்குட்பட்ட சின்னச்சிப்பிக் குளம் தாருல் உலூம் முஸ்லிம் மகாவித்தியால மாணவர்களும் பெற்றோர்களும் நேற்றுக் காலை பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அந்தப் பாடசாலையில் கடமையில் இருந்த அதிபர் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளதுடன் அவருக்குப் பதிலாக மாகாண கல்வித் திணைக்களத்தால் புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டு நேற்று அவர் கடமைகளை பொறுப்பேற்கவிருந்த நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிமகையில்-

தற்போது நியமிக்கப்பட்டுள்ள அதிபர் எமது பாடசாலையில் ஏற்கனவே அதிபராக பணியாற்றியிருந்தார். இந்நிலையில் அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளன. பாடசாலையில் பல்வேறு முறைக்கேடான சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன. எனவே அந்த அதிபரை மீண்டும் எமது பாடசாலைக்கு நியமித்து பாடசாலையின் அபிவிருத்தியில் வீழ்ச்சியை ஏற்படுத்தவேண்டாம். எனவே இவருக்கு பதிலாக வேறு ஒரு அதிபரை நியமிக்கவேண்டும்-என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பாடசாலையின் பிரதான வாயிலை மூடி எவரையும் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. சம்பவ இடத்திற்கு சென்ற செட்டிகுளம் கோட்டக்கல்வி அதிகாரி மற்றும் பொலிஸார் அவர்களுடன் பேச்சு நடத்திய நிலையிலும் அவர்கள் தமது கோரிக்கையில் உறுதியாக நின்றனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன் இது தொடர்பாக கலந்துரையாடி ஒரு தீர்வுக்கு வரலாம் என தெரிவித்ததுடன், பாடசாலை வாயிலை திறக்குமாறு கோரினார். பின்னர் பாடசாலை வாயில் திறக்கப்பட்டு ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டது.

பேச்சின் பிரகாரம் அவர்களது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் போராட்டம் கைவிடப்பட்டது. பின்னர் கல்விச்செயற்பாடுகள் வழமைக்கு திரும்பின.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த வலயக்கல்வி பணிப்பாளர், கிராம மக்கள் மற்றும் பெற்றோர்களது கோரிக்கைக்கமைய குறித்த அதிபருக்கு பதிலாக வேறு ஒரு அதிபரை இப்பாடசாலைக்கு நியமிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதாக அவர்களுக்கு தெரிவித்துள்ளோம்-என்றார்.

# 916 பேர் குணமடைவு

கொழும்பு, பெப். 02

நாட்டில் நேற்று மேலும் 916 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி இலங்கையில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 58,075 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் 64,157 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதில் 5,766 பேர் வைத்திய சாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் 767 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர்.

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளான 316 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பலாங்கொடை விகாராதிபதி திருக்கேதீஸ்வரம் சென்றார்

கொழும்பு, பெப். 02

பலாங்கொடை விகாரையின் பிரதம விகாராதிபதி றாஹுல ஹிமி தேரர் பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்திற்கு நேற்று திங்கட்கிழமை காலை திடீர் விஜயத்தை மேற்கொண்டு ஆலய நிர்வாகத்தை மத நல்லிணக்க அடிப்படையில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் திருக்கேதீச்சர ஆலயத்தின் பிரதம குரு கருணாநந்த குருக்கள் , திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபையின் இணைச் செயலாளர் எஸ்.இராமக்கிருஷ்ணன், மன்னார் அன்னை இல்லப் பொறுப்பாளர் எஸ். பிருந்தாவனநாதன் மற்றும் நிர்வாகத்தினரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்ட மக்களின் நிலை தொடர்பாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மேல்மாகாண பாடசாலைகளில் அன்ரிஜென் பரிசோதனைகள்

கொழும்பு, பெப். 02

மேல் மாகாணப் பாடசாலைகளில் எழுமாற்றாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை தெரிவு செய்து உடனடி அன்ரிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தும் வேலைத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகின.

ராஜகிரிய ஜனாதிபதி வித்தியாலயத்தில் இந்த நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு கருத்து தெரிவித்த கல்வி அமைச்சர்,

நாளொன்றுக்கு இரண்டு, மூன்று பாடசாலைகளை தேர்ந்தெடுத்து ஒவ்வொரு பாடசாலைகளிலும் சுமார் 30 மாணவர்களை உடனடி அன்ரிஜென் பரிசோதனைக்கு உட்படுத்துவதன் ஊடாக பாடசாலைகளில் எந்தளவுக்கு கொவிட் 19 வைரஸ் பரவியுள்ளது என அறிந்து கொள்ளமுடியும். பாடசாலைகளை திறப்பது மற்றும் ஏனைய அனைத்து விடயங்களுக்கும் இந்த தகவல்கள் மிகவும் உதவியாக இருக்கும்- என்றார்.

# தேசிய கொடியில் மாற்றமே இல்லை

## சிங்கத்தின் உருவம் குறித்து பரீசிலனை

கொழும்பு, பெப். 02

**வழமை போன்று இம்முறையும் முன்னர் பயன்படுத்தப்பட்ட தேசிய கொடியே சுதந்திர தினத்திற்காக பயன்படுத்தப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ன தெரிவித்தார்.**

கடந்த காலம் முதல் தேசிய கொடி தொடர்பில் உள்ள குறைபாடுகள் குறித்து பேசப்பட்டு வந்தது. இந்நிலையில், அந்த குறைபாடுகள் இம்முறை நீக்கப்பட்டுள்ளதா? என்று ஊடகவியலாளர் ஒருவர் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் எழுப்பிய கேள்விக்கு செயலாளர் பதிலளிக்கையில், தற்பொழுது நாம் தேசிய கொடி ஒன்றைப் பயன்படுத்துகின்றோம். சமூகத்தில் பல்வேறு தரப்பினர் இதில் உள்ள குறைபாடுகள் குறித்து சுட்டிகாட்டினர்.

தேசிய கொடியில் சிங்கத்தின் உருவத்தில் உள்ள குறைபாடுகள் திருத்தி வடிவமைக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர். இவர்கள் அனைவரினதும் ஆலோசனைகளை நாம் பெற்றுக்கொண்டுள்ளோம். இதுதொடர்பில்



உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

இதுதொடர்பில், பெரும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் இறுதி நடவடிக்கையாக இந்த விடயத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். இதனால் இம்முறை தேசிய சுதந்திர தின வைபவத்தை நடத்தும் பொழுது இதிலும் பார்க்க மேலதிகமாக ஏதும் செய்வதற்கு இல்லை. இதனால் நாம் முன்னர் பயன்படுத்திய தேசிய கொடியை நாம் பயன் படுத்துவோம்.

தேசிய கொடியில் எந்த மாற்றமும் இல்லை. சிங்கத்தின் உருவத்தில் உள்ள குறைபாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். இதனை வடிவமைப்பாளர்களுடனும், அரசாங்க அதிகாரிகளுடனும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி இதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது- என்றார்.

# வெட்டுப்புள்ளி அடிப்படையில் மாணவரை தரம்-6 இல் சேர்த்துக்கொள்வது பிற்போடல்

கொழும்பு,பெப். 02

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் வெட்டுப் புள்ளிகள் அடிப்படையில் பாடசாலைகளில் மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளது.

சுமார் ஒரு மாத காலத்துக்கு இந்த நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பாடசாலை ரீதியிலான வெட்டுப்புள்ளிகள் கடந்த ஜனவரி மாதம் 15ஆம் திகதி வெளியாகியிருந்தன.

எவ்வாறாயினும், இந்த வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்ட முறை தொடர்பில்பல் வேறு தரப்பினரும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையிலேயே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுபான்மை மக்களின் பிரச்னைகள் மக்கள் காங்கிரஸ் கருவுடன் சந்திப்பு

கொழும்பு, பெப். 02

நியாயமான சமூகத்திற்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரியவை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர்கள், கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீன் தலைமையில் நேற்று கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, நியாயமான சமூகத்திற்கான தேசிய இயக்கம், கடந்த காலங்களில் சிறுபான்மையினருக்கு இடம் பெறும் அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுத்து வருவதற்காகவும், விசேடமாக முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு விடயத்தில் எதிர்ப்பை வெளியிட்டமைக்கும், அந்த அமைப்புக்கு தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

அத்துடன்,சிறுபான்மைச் சமூகம் தற்போது எதிர்நோக்கியுள்ள காணிப் பிரச்னை, இராணுவ மயமாக்கல் போன்ற இன்னோரன்ன பல பிரச்னைகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினர்.

இந்த சந்திப்பில் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், கட்சியின் தவிசாளர் அமீர் அலி, செயலாளர் எஸ்.சுபைர்தீன், சிரேஷ்ட பிரதித் தலைவர் சஹீட் மற்றும் பொருளாளர் ஹுசைன் பைலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மேலும் சில பிரதேசங்கள் விடுவிப்பு

கொழும்பு, பெப். 02

தனிமைப்படுத்தலில் இருந்து மேலும் சில பிரதேசங்கள் நேற்று காலை விடுவிக்கப்பட்டுள்ளன.

கொவிட் 19 தொற்று பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் இதனை அறிவித்துள்ளது.

அதன்படி, நாரஹேன்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட100 ஆம் இலக்கத் தோட்டம் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகத்துவாரம் - அன்றூஸ் வீதி, கீழ் மற்றும் மேல் புனித அன்றூஸ் பிளேஸ் பகுதிகளில் தனிமைப் படுத்தல் தளர்த்தப்பட்டுள்ளன.

மேலும், பேலியகொடை பொலிஸ் பிரிவின் கங்கபட கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 90 ஆம் இலக்க தோட்டம் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

# வீதி புனரமைப்புப் பணிக்காக போடப்பட்ட கேடர்கள் திருட்டு

யாழ்ப்பாணம், பெப். 02

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எருவன் பகுதியில் வீதி புனரமைப்பு வேலைகளுக்காக பயன்படுத்தப்படும் கேடர்கள் களவாடப்பட்டுள்ளன என்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



கோப்புப்படம்

இந்தச் சம்பவம் கடந்த 29ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.

கொடிகாமம் - புலோலி - பருத்தித்துறை வீதி காப்பெற் வீதியாக போடப்பட்டு வருகின்றது. இவ்வேலைத்திட்டத்தை தனியார் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

காப்பெற் போடும்வேளை வீதிக்கு நடுவே பயன்படுத்தப்படும் கேடர்களே இவ்வாறு களவாடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# வேலணை பிரதேச செயலகம் முன் மக்கள் ஒன்றுதிரண்டு போராட்டம்

## புதிய செயலாளர் பதவி ஏற்க எதிர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 02

வேலணை பிரதேச செயலர் எஸ்.சோதிநாதனின் இடமாற்றத்துக்கும் புதிய செயலர் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்பதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச செயலக வாயிலை மூடி பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும் பஸ்ஸில் பொலிஸார் வந்திறங்கி ஆர்ப்பாட்டக்காரர்களைக் கைது செய்வோம் என எச்சரித்ததால் அங்கு பதற்றநிலை ஏற்பட்டது.

வேலணை பிரதேச செயலர் எஸ்.சோதிநாதனுக்கு நேற்று நடைமுறைக்கு வரும் வகையில் வவுனியா வெண்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலராக இடமாற்றம் வழங்கப்பட்டது.

அத்துடன் வவுனியா வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலாளர், எஸ்.சிவகரன், வேலணை பிரதேச செயலராக மாற்றப்பட்டார்.

இந்த நிலையில் புதிய பிரதேச செயலர் இன்று காலை கடமைகளைப் பொறுப்பேற்க விருந்த நிலையில் பிரதேச மக்கள் பிரதசே செயலக வாயிலை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனை அறிந்த பொலிஸார், நேற்று முற்பகல் 10 மணியளவில் பஸ் ஒன்றில் வந்து இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டோரை கைது செய்வோம் எனவும் கலைந்து செல்லுமாறும் தெரிவித்தனர்.

அதனால் அங்கு பதற்றநிலை ஏற்பட்டது. அத்துடன் புதிய பிரதேச செயலரை கடமையேற்கவைக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

# ஐ.நா. மனித உரிமை பேரவையின் காணொளிக்கு இலங்கை எதிர்ப்பு

கொழும்பு, பெப். 02

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் பேரவை, தனது டுவிட்டர் பதிவில் இலங்கைக்கு எதிராக வெளியிட்டுள்ள காணொளிக்கு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இந்த டுவிட்டர் பதிவு தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இந்தச் செயற்பாடு சிறந்ததொன்று அல்ல.

அது தனது டுவிட்டர் பதிவில், கடந்த கால மனித உரிமை மீறல்களை இலங்கை கவனிக்கத் தவறியுள்ளது. ஆகையால் மனித உரிமை மீறல்கள் மீண்டும் மீண்டும் நிகழும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது எனக் கூறியுள்ளது.

மேலும் இலங்கையில் நடைபெற்ற யுத்தத்துடன் தொடர்பான காணொளிக் காட்சிகளையும் டுவிட்டரில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பதிவேற்றியுள்ளது.

இவ்வாறு இலங்கை அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள விடயங்கள் நல்லிணக்கத்துக்கு ஏற்புடையவை அல்ல. ஆகவே இதற்கு எதிர்ப்பை வெளியிடுகின்றேன்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி 12ஆம் திகதி முதல் மார்ச் 19ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வில் இலங்கை விவகாரம் குறித்து ஆய்வுக்கு பட்டியலிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா விரைவில் சுற்றுலா வலயமாகும்

கொழும்பு, பெப். 02

நுவரெலியாவை விரைவில் சுற்றுலா வலயமாக அறிவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான புதிய சுற்றுலாத்தளமாக நுவரெலியா மாற்றமடையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நானு ஓயாவில் இருந்து நுவரெலியாவரை கேபிள் கார் திட்டத்துக்காக 52 மில்லியன் யூரோ ஒதுக்கிடப்பட்டுள்ளதுடன், அந்தத் திட்டத்தை பீதுருதாலகால வரையில் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் இதுவரை 318 சுற்றுலாத்தளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன-என்றார்.

## 73ஆவது சுதந்திர தின நிகழ்வில்

# சிங்களத்தில் மாத்திரம்தான் தேசிய கீதம் இசைக்கப்படும்

## பாதுகாப்புச் செயலர் உறுதி



கொழும்பு, பெப்.02

**இலங்கையின் 73ஆவது சுதந்திர தின நிகழ்வில் சிங்கள மொழியில் மாத்திரமே தேசிய கீதம் இசைக்கப்படும் என பாதுகாப்புச் செயலர் கமல் குணரத்ன தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது காணப்படும் நிலைமை காரணமாக, இந்த முறை சுதந்திர தின நிகழ்வுகளைப் பார்வையிட மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பங்கேற்கும் அனைத்துப் படையினரும் பி.சி.ஆர் அல்லது அன்ரிஜென் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

பரிசோதனை அறிக்கைகள் ஒழுங்காக இருந்தால் மாத்திரமே படையினர் அணிவகுப்பில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடுதல் திட்டம்

கொழும்பு, பெப். 02

பெப்ரவரி மாதம் 04 திகதி 73 ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்துடன் இணைந்து நாடு முழுவதும் மரக் கன்றுகள் நடும் திட்டத்தை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அனைத்து கிராம சேவையாளர்கள் மற்றும் பிரதேச செயலர்கள் மூலம் அனைத்து கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கி இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் என்று பாதுகாப்பு, உள்துறை மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

# 288 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்

கொழும்பு, பெப். 02

வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த மேலும் 288 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

தொழில் நிமித்தம் சவுதி அரேபியாவுக்குச் சென்றிருந்த நிலையில் பல்வேறு துன்புறுத்தல்களை எதிர்நோக்கியிருந்த இலங்கையர்கள் மற்றும் கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக நாடு திரும்ப முடியாத நிலையில் நிர்க்கதிக்கதிக்குள்ளா கியிருந்தவர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் விசேட திட்டத்துக்கமைய இவர்கள் அனைவரும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இதன்படி, குறித்த இலங்கையர்கள் நேற்று அதிகாலை 2 மணியளவில் கட்டுநாயக்கபண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு, நாடு திரும்பிய அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு இராணுவத்தினால் அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.



# பட்டதாரிப் பயிலுநர்களுக்கு வவுனியாவில் நியமனங்கள்

வவுனியா, பெப். 02

பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. நாட்டில் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்கப்பட்டன. அந்தவகையில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 357 பட்டதாரிகள் பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இந்த நேர்முகத்தேர்வில் பல்வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் பலர் மேன்முறையீடு செய்திருந்த நிலையில் அவர்களில் வவுனியாவைச் சேர்ந்த மேலும் 38 பேர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

அவர்களில் 30 பேருக்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று காலை இடம்பெற்றது. நிகழ்வில் அதிதிகளாக கலந்துகொண்ட பிரதேச செயலர் ந. கமலதாசன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி கருணாநிதி ஆகியோர் பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களை வழங்கினர்.

# 23 ஆம் திகதி இலங்கை வருகின்றார் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான்

கொழும்பு, பெப். 03

எதிர்வரும் பெப்ரவரி 23 ஆம் திகதி பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த தகவலை வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன் மூலம் கடந்த ஆண்டு முதல் கொரோனா தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு விஜயம் செய்த முதல் அரசாங்கத் தலைவராக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இருப்பார். இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரின் கொழும்புக்கான மூன்று நாட்கள் விஜயத்தின் ஒரு மாதத்திற்குப் பிறகு இம்ரான் கானின் இந்த திட்டமிட்ட விஜயம் அமையவுள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கடந்த 2016 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்திருந்தார்.

யுத்த காலத்தில் இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்கிய நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்றாகும். அத்துடன் கடந்த காலத்தில் ஐ.நா. மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு ஆதரவாக பாகிஸ்தானும் முக்கிய பங்கு வகித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஜெனிவா விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம்

## ரணில் அறிவுறுத்தல்

கொழும்பு, பெப். 02

இலங்கையின் உள்ளகப் பிரச்னையை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே சர்வதேச அரங்குக்கு கொண்டு சென்றார். நல்லாட்சி அரசாங்கம் அதனை செய்யவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் கடந்த அரசாங்கமே பல சாதகமான தீர்மானங்களை முன்னெடுத்தது. சிவில் ஆட்சிக்கு முரணாக செயற்படும் போது சர்வதேசம் எழுப்பும் கேள்விகளுக்கு அரசாங்கம் பதில் கூற வேண்டும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பில் வெளியிட்ட அறிக்கை குறித்து பல்வேறுப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை விவகாரத்தை அரசியல் கண்ணோட்டத்தில் பார்த்து தீர்வை பெறவோ, இணக்கமாக செயற்படவோ முடியாது. நாட்டை முன்னிலைப்படுத்தி பொதுத்தன்மையுடன் செயற்படுவது அவசியமாகும்.

நாட்டின் உள்ளக விவகாரத்தை நல்லாட்சி அரசாங்கம் சர்வதேச அரங்குக்கு கொண்டு சென்றதாகக் கூறுவது முற்றிலும் தவறானமாகும்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பிறகு முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய பொதுச்செயலாளர் பான் கீ மூனுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரமே இலங்கையின் உள்ளக விவகாரங்கள் சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்லப்பட்டன.

2015 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமை பேரவை உள்ளிட்ட அமைப்புக்களிடமிருந்து அரசாங்கம் சாதகமான தீர்மானங்களை பெற்றுக் கொண்டது. நாடு என்ற ரீதியில் ஒருபோதும் தனித்து செயற்பட முடியாது.

ஒரு நாட்டில் சிவில் ஆட்சி முறை இடம்பெறுகிறதா அல்லது இராணுவ ஆட்சி முறைமை இடம் பெறுகிறதா என்பதை ஐக்கிய நாடுகள் சபை உன்னிப்பாக அவதானிக்கும்.

நிர்வாகக் கட்டமைப்பை கொண்டு சர்வதேச அரங்கில் அங்கீகாரம் கிடைக்கப்பெறும். இலங்கையை சிவில் கட்டமைப்பிலான நிர்வாக முறைமையை கொண்ட நாடு என ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்துள்ளது.

இந்நிலைமைக்கு புறம்பாக செயற்படும்போது சர்வதேசம் கேள்வி எழுப்பும் அதற்கு பதில் கூறவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

உள்ளக மற்றும் சர்வதேச மட்டத்தில் எழும் பிரச்னைகளுக்கு தீர்வு காண பாராளுமன்ற அரசமைப்புப் பேரவை ஸ்தாபிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துக்கு பின்னர் அரசமைப்புப் பேரவை ஒரு சில காரணிகளை கொண்டு நீக்கப்பட்டுள்ளது.

அனைத்து தரப்பின் ஆலோசனைக்கு அமையவே எப்பிரச்னைக்கும் தீர்வு காண முடியும். ஆகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமை விவகாரத்தை அரசாங்கம் பொறுப்புடன் கையாள வேண்டும்-என்றார்.

# ஞாயிற்றுக்கிழமை மட்டும் விபத்துக்களில் 14 பேர் பலி

கொழும்பு, பெப். 02

நாட்டில் நேற்று முன்தினம் மாத்திரம் வீதி விபத்துக்களில் 14 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதில் 09 பேர் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர். ஏனைய 05 பேர் அண்மையில் வாகன விபத்தில் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளனர் என அஜித் ரோஹண கூறினார்.

அத்துடன் வீதிகளில் வாகனம் செலுத்தும்போது வீதிச் சட்டத்துக்கு அமைய செயற்படுமாறு கேட்டுக் கொள்வதாக அஜித் ரோஹாண மேலும் குறிப்பிட்டார்.

# ஆக்கிரமிப்புக்கு மத்தியில் நாட்டில் சுதந்திர தினமா?

## ஏற்கமுடியாது என்கிறார் மாவை



**யாழ்ப்பாணம், பெப்.02**

**இலங்கையில் சுதந்திர தினத்தை கொண்டாடுவதில் அர்த்தமில்லை, எனவே சுதந்திர தின அழைப்புகளை நாம் ஏற்கப்போவதில்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-**

வடக்கு-கிழக்கு தமிழர் பூமியில் சிங்கள பேரினவாத அரசாங்கம் தொல்பொருள் பிரதேசங்கள் என்ற பெயரில் முன்னெடுக்கும் ஆக்கிரமிப்புகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

ஒருபுறம் இராணுவ நில ஆக்கிரமிப்புகள் மும்முரமாக இடம் பெற்று வருகின்றது. மறுபுறம் மரபுரிமைகள், தமிழர் அடையாளங்கள் முழுமையாக அழிக்கப்பட்டு சிங்கள மயமாக்கல் இடம் பெற்று வருகின்றது.

இந்த நாட்டில் தமிழர்களும் பூர்வீகக்குடிகள், எமக்கும் இந்த மண்ணில் சம உரிமை உண்டு என்பதை இந்த அரசாங்கம் நிராகரிக்கும் விதத்திலேயே செயற்பட்டு வருகின்றது.

அதன் வெளிப்பாடுகளே இன்று துரிதமாக முன்னெடுக்கப்படும் நில அபகரிப்பாகும். எனவே இவ்வாறான நிலையில் தமிழர்களின் சுதந்திரம், உரிமைகள் மறுக்கப்படுகின்ற நாட்டில் எம்மால் மகிழ்ச்சியாக சுதந்திர தினத்தை கொண்டாட முடியாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

ஆகவே இம்முறை சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டாலும் நாம் எவரும் கலந்து கொள்ளமாட்டோம்.

அன்றைய தினம் வடக்கில் இடம்பெறும் எமது உரிமைக்கான போராட்டத்தில் நாம் கலந்துகொண்டு எமது மக்களின் நியாயம், நில உரிமை, பேச்சு சுதந்திரத்திற்காக நாம் குரல் எழுப்பும் கடமை எமக்குண்டு-என்றார்.

# ஆற்றில் மூழ்கி மாணவி மரணம்

## ஆசிரியை கைது

கொழும்பு, பெப். 02

வளவை ஆற்றில் நீராடச் சென்ற நிலையில், பாடசாலை மாணவி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஆசிரியை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாணவர்களை நீராட அழைத்துச்சென்ற ஆசிரியையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பலாங்கொடை, கல்தொட்ட படகொட பிரதேசத்தில் வளவை கங்கையில் நீராடிக்கொண்டிருந்த மாணவ மாணவிகளில் ஒரு மாணவி நீரில் மூழ்கி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

குறித்த ஆசிரியை பாடசாலையின் அதிபரிடமோ அல்லது வலய கல்விப் பணிப்பாளரிடமோ எவ்வித அனுமதியினையும் பெறாமல் மாணவர்களை வளவை கங்கைக்கு நீராட அழைத்துச் சென்றுள்ளார் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

# செட்டிகுளத்தில் நடந்த விபத்தில் படுகாயமடைந்தவர் உயிரிழப்பு

வவுனியா, பெப். 02

வவுனியா- செட்டிகுளம் நகர்பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்திருந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கடந்த 18ஆம் திகதி, செட்டிகுளம் நகர்பகுதியில் மோட்டர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர், வீதியைக் கடக்க முற்பட்டபோது மதவாச்சியில் இருந்து மன்னார்ப்பகுதி நோக்கி சென்ற டிப்பர் வாகனம் மோதியதில் படுகாயமடைந்தார்.

அவர் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தில் செல்லப்பன் ராஜ்குமார் (வயது 54) என்பவரே உயிரிழந்துள்ளாரென வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.




# ஒரு வாரம் தேசியக்கொடியை பறக்க விடுமாறு கோரிக்கை

கொழும்பு, பெப். 02

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று முதல் எதிர்வரும் 07 ஆம் திகதி வரை தேசியக் கொடியைப் பறக்கவிடுமாறு அரசாங்கம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சகல வீடுகளிலும் , வர்த்தக நிலையங்களிலும், அரச, தனியார் நிறுவனங்களிலும் மற்றும் வானங்களிலும் நேற்று முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 07 ஆம் திகதி வரை தேசியக் கொடியைப் பறக்க விடுமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன்,அரச அலுவலகங்கள் அமைந்துள்ள சகல கட்டடங்களையும் பெப்ரவரி 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் மின் விளக்குகளால் அலங்கரிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

செழிப்பான எதிர்காலம் சௌபாக்கியமான நாடு’ என்ற தொனிப்பொருளில் இம்முறை சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதனை முன்னிட்டு விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# மியன்மாரில் இராணுவ ஆட்சி!



## ஆங் சான் சூகி உள்ளிட்ட தலைவர்கள் கைது



மியன்மார் நாட்டில் ஆங் சான் சூகி உள்ளிட்ட முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த நாட்டில் ஆட்சியை ராணுவம் கைப்பற்றியுள்ளதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மியன்மாரில் அண்மையில் நடந்த தேர்தலை அடுத்து அரசாங்கத்துக்கும் ராணுவத்துக்கும் இடையில் நிலவி வந்த பதற்றத்தைத் தொடர்ந்து இந்தத் தகவல் வெளிவந்துள்ளது.

நாட்டின் முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்ட சில மணிநேரங்களுக்குப் பிறகு, மியன்மாரில் ஓராண்டுக்கு அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக தொலைக்காட்சியின் மூலம் அந்த நாட்டின் ராணுவம் அறிவித்துள்ளது.

பர்மா என்றும் அழைக்கப்படும் மியன்மார் 2011 இல் ஜனநாயக சீர்திருத்தங்கள் தொடங்கும் வரை இராணுவத்தால் ஆளப்பட்டது.

இந்த நிலையில், தளபதி மின் ஆங் ஹ்லேங்கிடம் அதிகாரத்தை ஒப்படைப்பதாக மியன்மார் ராணுவம் தெரிவித்துள்ளது. இதையடுத்து தலைநகரான நேபியேட்டோ மற்றும் முக்கிய நகரமான யாங்கூனின் தெருக்களில் ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.

### ஆங் சாங் சூகி கைது

முன்னதாக, மியன்மார் நாட்டின் என்.எல்.டி. கட்சியின் தலைவர் ஆங் சான் சூகி கைது செய்யப்பட்டதாக அந்த கட்சியின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்துக்கும் ராணுவத்துக்கும் இடையிலான பதற்றத்தினால் இந்த கைது நடத்திருக்கிறது. இப்பதற்றமான சூழல், ஆட்சிக் கவிழ்க்கப்படலாம் என்கிற அச்சத்துக்கு வலுசேர்த்திருந்தது.

தனது ஆதரவாளர்கள் இதை "ஒப்புக் கொள்ளவேண்டாம்" என்றும் "ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராக போராட வேண்டும்" என்றும் ஆங் சான் சூகி தெரிவித்துள்ளார்.

தனது கைதுக்கு முன் கடிதம் ஒன்றை எழுதிய அவர், ராணுவத்தின் நடவடிக்கை நாட்டை மீண்டும் சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்கிறது என தெரிவித்தார்.

கடந்த நவம்பரில் நடந்த தேர்தலில், நஷனல் லீக் பார் டெமோகிரசி (என்.எல்.டி) கட்சி ஆட்சியை அமைப்பதற்குத் போதுமான இடங்களில் வெற்றி பெற்றிருந்தது. ஆனால் அந்த நாட்டு ராணுவமோ தேர்தலில் மோசடி நடந்ததாக தொடர்ந்து குற்றஞ்சாட்டி வந்தது.

கடந்த 2011ஆம் ஆண்டு வரை பர்மா என்றழைக்கப்பட்ட மியன்மார், ராணுவத்தின் பிடியில் இருந்தது. இதனால், சூகி பல ஆண்டுகளை வீட்டுக் காவலில் கழித்தார்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மியன்மார் பாராளுமன்றத்தின் கீழவை, நேற்று கூட இருந்தது. ஆனால் தற்போது அந்த நாட்டு ராணுவம் தலையிட்டு அந்தக் கூட்டத்தை ஒத்திவைக்க அழைப்பு விடுத்திருக்கிறது.

மியன்மாரின் தலைநகரான நேபியேட்டோ மற்றும் யாங்கூனின் சாலைகளில் ராணுவ வீரர்கள் இருக்கிறார்கள் என பிபிசியின் தெற்காசிய செய்தியாளர் ஜானதன் ஹீட் கூறுகிறார்.

ஆங் சாங் சூகி, மியன்மாரின் அதிபர் வின் மைன்ட் என பல தலைவர்கள் நேற்றுக் காலையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என ரொய்ட்டர்ஸிடம் என்.எல்.டி கட்சியின் செய்தித் தொடர்பாளரான மயோ நியுன்ட் கூறினார்.

"மியன்மார் மக்கள் எந்தவித மோசமான வழியிலும் எதிர்வினையாற்றவேண்டாம் எனக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சட்டத்தின் வழியில் நடக்க வேண்டும். நானும் கைது செய்யப்படலாம்" என்றார் மயோ.

தொலைபேசி மற்றும் அலைபேசி அழைப்பு சேவை மட்டுமின்றி இணைய சேவையும் துண்டிக்கப்பட்டிருப்பதாக பிபிசியின் பர்மீசிய சேவை கூறுகிறது.

மியன்மார் நாட்டின் பல்வேறு பிராந்தியத்தின் முதலைச்சர்களும் கைது செய்யப்பட்டிருப்பதாக அவர்களின் குடும்பத்தினர்கள் கூறுகிறார்கள்.

மியன்மாரின் ஆயுதப் படையினர், அரசமைப்புச் சட்டத்தைக் கடைப்பிடிப்போம் என கடந்த சனிக்கிழமை உறுதியளித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### தேர்தலில் என்ன பிரச்னை?

கடந்த ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி நடந்த தேர்தலில் என்.எல்.டி கட்சி மொத்தம் உள்ள இடங்களில் 83 சதவீதம் வெற்றி பெற்றது. இதை பலரும் சூகியின் மக்கள் அரசாங்கத்தின் மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பாகப் பார்த்தார்கள்.

2011ஆம் ஆண்டு வரையிலான ராணுவ ஆட்சிக்குப் பிறகு நடத்தப்பட்ட இரண்டாவது தேர்தல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

மியன்மார் நாட்டின் ராணுவம் இந்தத் தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த நாட்டின் அதிபர் மற்றும் தேர்தல் ஆணையத்தின் தலைவருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் புகாரளித்திருக்கிறது ராணுவம். தேர்தல் ஆணையம் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்திருக்கிறது.

தேர்தலில் மோசடி நடந்ததாக குற்றஞ்சாட்டப்படும் இந்த விவகாரம் தொடர்பாக "நடவடிக்கை எடுக்கப்போவதாக" மியன்மார் ராணுவம் சமீபத்தில் அச்சுறுத்தி இருந்தது. எனவே ஆட்சிக் கவிழ்ப்பு நடக்கலாம் என்கிற அச்சம் அப்போதே உண்டானது.

### 'கூப்' என்றால் என்ன?

கூப் என்பது ஒரு பிரெஞ்சு மொழிச் சொல். 'தாக்கு' என்பது தான் இதன் நேரடி பொருள்.

சட்டத்துக்குப் புறம்பாக வன்முறை மூலமோ அல்லது அச்சுறுத்தல்கள் மூலமோ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசை கவிழ்ப்பதைத் தான் இவ்வாறு அழைக்கிறார்கள் என்கிறார்கள்.

இப்படி அரசைக் கவிழ்க்கும் செயல்பாட்டில் ஒரு நாட்டின் ராணுவமே ஈடுபட்டால் அதை இராணுவப் புரட்சி என்கிறார்கள்.

### சர்வதேச அளவில் எழும் கண்டனம்

அமெரிக்கா மியன்மாரில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

"மியன்மாரின் அரசு அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். மியன்மார் மக்களின்ஜனநாயகம், சுதந்திரம், அமைதி, மேம்பாடு தொடர்பான விருப்பங்களுடன் அமெரிக்கா நிற்கிறது. அந்த நாட்டின் ராணுவம் தங்கள் நடவடிக்கைகளை உடனடியாக பின் வாங்க வேண்டும்" என அமெரிக்காவின் உள்துறைச் செயலர் அன்ரனி பிலிங்கென் கூறியுள்ளார்.

"மியன்மார் நாட்டின் சட்டத்தை அந்த நாட்டு ராணுவம் மதிக்க வேண்டும். தங்களுக்கிடையிலான பிரச்னைகளை சட்டத்தின் படி மியன்மார் ராணுவம் தீர்த்துக் கொள்ள வேண்டும். காவலில் வைக்கப்பட்டிருக்கும் அனைத்து தலைவர்களையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்" என அவுஸ்திரேலியாவின் வெளிவிவகாரத் துறை அமைச்சர் மரிசே பெய்ன் கூறியுள்ளார்.

> **"மியன்மார் நாட்டின் ராணுவம் இந்தத் தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்ள வில்லை. அந்த நாட்டின் அதிபர் மற்றும் தேர்தல் ஆணையத்தின் தலைவருக்கு எதிராக உயர் நீதி மன்றத்தில் புகாரளித்திருக்கிறது ராணுவம். தேர்தல் ஆணையம் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத் திருக்கிறது."**







# ட்ரம்ப் ஏற்படுத்திய காயத்தை ஆற்றுவாரா ஜோ பைடன்?

**ஜோ** பைடன் ஜனாதிபதியாகப் பதவியேற்கும் நாள் முதலில் வாரக் கணக்கில் எண்ணப்பட்டது, பிறகு நாள் கணக்கில், பிறகு மணிக் கணக்கில், நிமிடக் கணக்கில், ஏதோ அமெரிக்கர்கள் புத்தாண்டின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்ததைப் போல. இந்த விஷயத்தில், வெறுக்கத்தக்க ஒரு நிர்வாகத்தை உதறித் தள்ளுவதற்கான 8.1 கோடி அமெரிக்கர்களின் தீவிர விருப்பம் மட்டுமல்ல, டொனால்ட் ட்ரம்ப் பதவியில் இருக்கும் போதே என்ன செய்வார் என்பது குறித்த நியாயமான பயமும் அடங்கியிருந்தது.

### சிறந்த பதிலடி

ஒருவழியாக ஜனவரி 20ஆம் திகதி வந்தேவிட்டது. அமெரிக்கத் தலைநகரில் குளிர் மிகுந்த, பலத்த காற்று வீசும் புதன் கிழமை காலைப் பொழுது.

அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதியாக பைடனும், அமெரிக்காவின் முதல் பெண் துணை ஜனாதிபதியாக கமலா ஹரிஸூம் பதவியேற்றுக்கொண்டனர். இரண்டு வாரங்களுக்கு முன்பு ட்ரம்ப்பால் தூண்டப்பட்ட கலவரக்காரர்கள் எந்த இடத்துக்குள் அத்துமீறி நுழைந்தார்களோ அதே இடத்தில் பைடனும் கமலாவும் பதவியேற்றுக்கொண்டார்கள். அந்தக் கறுப்பு தினத்துக்கு இதைவிட சிறந்த பதிலடி இருக்க முடியாது.

ஜனவரி 6 அன்று கேப்பிட்டலைச் சூறையாட முயன்ற, வன்முறை பீடித்த, வெறுக்கத் தக்க கும்பல் அமெரிக்காவின் மோசமான பக்கத்தைப் பிரதிபலித்தது என்றால் பைடனின் பதவியேற்பில் மேடையில் இருந்தவர்கள் அமெரிக்காவின் சிறப்பான பக்கத்தைப் பிரதிபலித்தார்கள்.

'ஜனநாயகமானது எளிதில் பாதிப்புக்குள்ளாகக் கூடியது. இந்த நேரத்தில், என் நண்பர்களே, ஜனநாயகம் வென்றிருக்கிறது' என்று ஜனாதிபதி பைடன் தனது பதவியேற்பு உரையில் குறிப்பிட்டார். 'ஒரு ஜனநாயகத்தில் மிகவும் அரிதான விஷயம்: ஒற்றுமை. ஒற்றுமை இன்றி அமைதி இல்லை. கசப்பும் சீற்றமும்தான் இருக்கும். நாடு இருக்காது. அலங்கோலத்தின் ஆட்சிதான் இருக்கும்' என்றார் பைடன்.

கறுப்பினத்தவருக்கான விடுதலைப் பிரகடனத்தில் 150 ஆண்டுகளுக்கு முன்பு ஆபிரஹாம் லிங்கன் கையெழுத்திடும் போது கூறிய வார்த்தைகளை பைடன் நினைவுகூர்ந்தார்: 'என் முழு ஆன்மாவும் இதில் இருக்கிறது.'

### ட்ரம்ப்பின் கோழைத்தனம்

ஒரு விடயத்தை பைடன் பேசவில்லை. அவருக்கு முன்னால் இந்தப் பதவியை வகித்தவரின் பெயர்தான் அது. வழக்கமான சூழல்களில் இப்படிச் செய்வது அவமரியாதையின் உச்சமாகவே கருதப்படும். ஆனால், அந்த நிகழ்ச்சிக்குக்கூட வந்திராத ட்ரம்ப்புக்கு இது சரியான விடை கூறலே ஆகும். கடைசிவரை முசுடு பிடித்தவராகவும் சிறுபிள்ளைத்தனமான கோழையாகவும் இருந்த அந்த நபர் நகரத்தை விட்டுப் பல மணி நேரங்களுக்கு முன்பே வெளியேறினார்.

வரலாற்றிலேயே ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற முதல் நபர் போல ட்ரம்ப் நடந்துகொண்டார். ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலிலும் ஒரு தோல்வியாளர் இருக்கவே செய்வார். புதன் கிழமைக்கு முன்புவரை வெளியேறும் ஜனாதிபதிகள் புதிய ஜனாதிபதியிடம் அதிகாரத்தின் கடிவாளத்தைக் கண்ணியத்துடன் ஒப்படைத்திருக்கிறார்கள். தங்களை அடுத்துப் பதவிக்கு வருபவர்களின் பதவியேற்பு விழாவில் பங்கேற்க மறுத்த மிகச் சிலரும்கூட அன்ட்ரூ ஜோன்ஸன் போன்றவர்கள், புதிய ஜனாதிபதிகளின் வெற்றியைக் கேள்விக்குள்ளாக்கும்படி பொய்களைப் பரப்பியதில்லை. பெரும்பாலான ஜனாதிபதிகளுக்கு தாங்கள் கொண்டுசென்ற திசையிலும் மாறுபட்ட திசையில் புதிய ஜனாதிபதிகள் நாட்டைக் கொண்டுசெல்வார்கள் என்பது தெரியும். அதை அறிந்துகொண்டு தான் அதிகாரத்தைக் கைமாற்றி விடுகிறார்கள். தங்கள் அகந்தையைவிட அமெ ரிக்கா எனும் லட்சியத்தை அவர்கள் பெரிதும் மதித்ததால் அப்படிச் செய்தார்கள். அதற்குப் பதிலாக ட்ரம்ப் தனது கடமையைத் துணை ஜனாதிபதி மைக் பென்ஸிடம் தள்ளிவிட்டுச் சென்றார். மேடையில் மைக் பென்ஸ் அமர்ந்திருந்தது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாக இருந்தது. ஏனெனில் கடந்த நான்கு ஆண்டுகளாக தனது எஜமானரின் காலடியில் விசுவாசமாக இருந்துகொண்டு அவர் தன்னைத் தானே கேவலப்படுத்திக்கொண்டவர்.

வரலாற்றிலேயே மிகவும் அவமானப்பட்ட, மிகவும் அவமானகரமான அதிபராக ட்ரம்ப் தனது பதவியை விட்டுச் சென்றார். ஒட்டுமொத்த தேசத்தையும் அவர் பிளவுபடுத்தி அதனைக் களைப்படையச் செய்துவிட்டார். கடைசி நொடி வரை தனது பதவியை அவர் தவறாகப் பயன்படுத்தினார். கடைசி நிமிட மன்னிப்புகளை ஸ்டீவ் பனான் உள்ளிட்ட நண்பர்களுக்கு வழங்கினார். அவரது முன்னாள் பிரசார மேலாளரான ஸ்டீவ் பனான் அமெரிக்க எல்லையில் சுவர்கள் எழுப்பப்போவதாகச் சொல்லி ட்ரம்ப்பின் ஆதரவாளர்களிடம் பணம் வசூலித்து ஏமாற்றியது போன்ற குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டிருப்பவர்.

ட்ரம்ப்பின் வசம் இன்னொரு சாதனையும் இருக்கிறது. இரண்டு முறை பதவி நீக்கத்தீர்மானம் கொண்டு வரப்பட்ட முதல் அதிபர் அவர். அவர் மீண்டும் ஒரு முறை ஜனாதிபதியாக ஆகாதவாறு பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசியல் ரீதியிலான பொறுப்பேற்பை அவர் எதிர்கொண்டிருக் கிறார் அதே நேரத்தில் பொருளாதாரரீதியிலான, சமூகரீதியிலான, குற்றவியல்ரீதியிலான பொறுப்பேற்பையும் அவர் சந்திக்க வேண்டும்.

ட்ரம்ப் தற்போது பதவியில் இல்லையென்றாலும் நாட்டில் அவர் ஏற்படுத்திய பாதிப்பு இன்னமும் நீடிக்கவே செய்கிறது. அவருக்கு வாக்களித்த 7.40 கோடி பேர் இன்னமும் அமெரிக்காவில்தான் இருக்கிறார்கள். மிகவும் பிளவுபட்ட நாடு ஒன்று எப்படி ஒன்றுபட்டு தனது காயங்களை ஆற்றிக்கொள்ளும் என்பதற்கு வழியறிவதற்கு நேரம் வரும். அது நடந்தாலும், ட்ரம்ப்பின் துஷ்பிரயோகங்களையோ அதற்கு யாரெல்லாம் உடந்தையாக இருந்தார்கள் என்பதையோ மறந்துவிட்டு அது நடக்காது. அமெரிக்கர்களை இந்த அளவுக்கு மோசமான நிலைக்குத் தள்ளிவிட்ட தீவிரமான பிரச்சினைகளை - பொருளாதார சமத்துவமின்மையில் ஆரம்பித்து இனவெறி, சமூக ஊடகங்களில் தவறான செய்திகள் பரப்புவது வரை -மறந்துவிட்டு அது நடக்காது.

> வரலாற்றிலேயே ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற முதல் நபர் போல ட்ரம்ப் நடந்துகொண்டார். ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலிலும் ஒரு தோல்வி யாளர் இருக்கவே செய்வார். புதன் கிழ மைக்கு முன்புவரை வெளியேறும் ஜனா திபதிகள் புதிய ஜனாதிபதி யிடம் அதி காரத்தின் கடிவாளத்தைக் கண்ணி யத்துடன் ஒப்படைத்திருக்கிறார்கள்.

### பைடன் முன்னுள்ள சவால்கள்

பைடனால் மட்டுமே இந்தப் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது, என்றாலும் பிரச்னையின் தீவிரத்தையும் காத்திருக்கும் முட்டுக்கட்டைகளையும் பற்றி அவர் நன்கு அறிவார். அவரது பாராளுமன்றச் செயல்திட்டங்கள் உச்ச நீதிமன்றத்தால் சவாலான சூழ்நிலைக்குத் தள்ளப்படலாம்.

ஏனெனில், நூற்றாண்டிலேயே மிகவும் தீவிரமான மரபியர்கள் உச்ச நீதிமன்றத்தை ஆக்கிரமித்து விட்டனர். பெரும்பான்மையான அமெரிக்கர்களுக்கு நேர்மாறாக சிந்திக்கும் நீதிபதிகள் அங்கே இருக்கிறார்கள் நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை விளங்கிக் கொள்வதிலும் சட்டங்கள் தொடர்பாகவும் இனிவரும் சில தசாப்தங்களுக்கு அவர்கள் சொல்வதுதான் இறுதித் தீர்ப் பாக இருக்கும்.

எனினும், தற்போது கொஞ்சம் நிதானம் கொள்வோமாக, பைடனை அமெரிக்கா தேர்ந்தெடுத்ததைக் கொண்டாடுவோம்.

அவர் பதவியேற்றதற்கு முந்தைய நாளில் இருந்ததைவிட மாயா ஜாலம் போல வேறொன்றாக அமெரிக்கா மாறிவிடவில்லைதான். எனினும், அமெரிக்கா தற்போது ஒரு கண்ணியமான, அனுபவம் வாய்ந்த பொதுச்சேவையாளர் ஒருவரால், அதாவது தனக்கு வாக்களித்தவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் அக்கறை கொண்ட ஒருவரால் ஆளப்படுகிறது என்பது பெரிய விஷயம். ஊழல்கறை படிந்த, எதேச்சாதிகாரி ஒருவரைத் தேர்தல் மூலம் அதிகாரத்தை விட்டுத் துரத்தியது சாதாரணச் செயல் அல்ல.

அமெரிக்க மக்கள் அதைச் சாதித்திருக்கிறார்கள். அவர்கள் இந்த தினத்தை (ஜனாதிபதி பதவியேற்பு தினம்) பெறுவதற்குத் தகுதியானவர்களே. புதிய அதிபரின் பதவியேற்பு என்பது சுயாட்சியின் சிகரமான சடங்காகும்.

தன் பதவியேற்பு நாளில் அவர் ஆற்றிய உரையின் இறுதியில், எதிர்காலத் தலைமுறைகள் 'அவர்கள் இந்த சிதறுண்ட நாட்டின் காயங்களை ஆற்றினார்கள்' என்று சொல்வார்களா என்று கேட்டார். பைடன் அதிகாரத்துக்கு வந்திருப்பதன் மூலம் காயத்தை ஆற்றும் செயல்பாட்டை நாடு தொடங்குவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. நமது இதயபூர்வமான வாழ்த்துகளுக்குத் தகுதியானவர் அவர்.

நன்றி:
நியூயோர்க் ரைம்ஸ்

# வடக்கில் ஜனவரியில் மாத்திரம் 557 கொரோனா தொற்றாளர்கள்

## பணிப்பாளர் கேதீஸ்வரன் தகவல்



யாழ்ப்பாணம்,பெப்.02

**வடக்கு மாகாணத்தில் ஜனவரி மாதம் மட்டும் 557 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இவர்களில் 330 பேர் வவுனியா மாவட்டத்திலும், 159 பேர் மன்னார் மாவட்டத்திலும், 46 பேர் யாழ். மாவட்டத்திலும், 14 பேர் கிளிநொச்சி மாவட்டத்திலும், 8 பேர் முல்லைத்தீவு மாவட்டத்திலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் கொரோனா தொற்று ஏற்பட்ட ஆரம்ப காலத்திலிருந்து இது வரை 805 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இதில் வவுனியா மாவட்டத்தில் 362 பேரும், யாழ். மாவட்டத்தில் 221 பேரும், மன்னார் மாவட்டத்தில் 176 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 34 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 12 பேரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்று ஆரம்பமான காலம் முதல் இது வரை வடக்கு மாகாணத்திலே மன்னார் மாவட்டத்தில் இருவரும், வவுனியா மாவட்டத்தில் ஒருவரும் என கொரோனா தொற்றால் மூவர் உயிரிழந்தனர்.

2021 ஜனவரி மாதம் யாழ். போதனா வைத்தியசாலையில் 11ஆயிரத்து 329 பி.சி.ஆர். பரிசோதனைகளும், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் 4 ஆயிரத்து 626 பி.சி.ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகள் மூலம் மருத்துவ சேவையாளர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினருக்கு கொரோனா தடுப்பூசி மருந்து வழங்கும் நடவடிக்கையில் நேற்றுமுன்தினம் இரண்டாம் நாளில் 1,530 பேர் தடுப்பூசியை பெற்றுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில், வடக்கு மாகாணத்தில் 9,944 சுகாதாரத்துறை சேவையாளர்கள் தகுதி பெற்றனர்.

மூன்று நாள்களுக்கு முன்னெடுக்கப்படும் இந்தப் பணியில் முதல் நாளான சனிக்கிழமை 2,997 பேர் கொரோனா தடுப்பூசி மருந்தைப் பெற்றுள்ளனர். இது 30 சதவீதத்தினர் ஆகும்.

இரண்டாம் நாளான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வடக்கு மாகாணத்தில் 1,530 சுகாதார சேவையாளர்கள் கொரோனா தடுப்பூசி மருந்தைப் பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 875 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 100 பேரும், மன்னார் மாவட்டத்தில் 200 பேரும், வவுனியா மாவட்டத்தில் 210 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 145 பேரும் நேற்று முன்தினம் தடுப்பூசி மருந்தைப் பெற்றனர்- என்றார். (எ)

# 5 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பகிஷ்கரிப்புக்கு பொது அழைப்பு

கொட்டகலை,பெப்.01

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு உள்ளிட்ட தொழிலாளர்களின் நலன்புரி சார்ந்த விடயங்களுக்கு ஏற்கனவே முதலாளிமார் சம்மேளனத்திடம் முன்வைத்த கோரிக்கைகளை அவர்கள் ஏற்க மறுத்துள்ளனர் என தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். இதனால் எதிர்வரும் 6ஆம் திகதி சம்பள நிர்ணய சபையில் இடம்பெறவுள்ள பேச்சுக்களுக்குத் தொழிலாளர்கள் மற்றும் ஏனைய தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட பொது அமைப்புக்கள் அவர்களின் ஒற்றுமையை வெளிக்கொணரும் வகையில் பேச்சுக்களுக்கு முந்திய தினமான 5ஆம் திகதி மலையகம் உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் அடையாள பணிப்பகிஷ்கரிப்பு ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ள நிலையில் இதுதொடர்பில் ஏனைய தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள், தொழிலாளர்கள் அனைவருக்கும் பொதுவான அழைப்பு விடுப்பதாக தெரிவித்தார். கொட்டகலை சீ.எல். எப் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# லிந்துலை நகர சபையின் தவிசாளர் பதவி நீக்கம்

தலவாக்கலை,பெப்.02

தலவாக்கலை, லிந்துலை நகர சபையின் தவிசாளரை பதவி நீக்க மத்திய மாகாண ஆளுநர் லலித் கமகே நடவடிக்கை எடுத்துள்ளார்.

தவிசாளருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் ஆளுநரால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தவிசாளருக்கு எதிராக உறுப்பினர் ஒருவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டுக்கமைய மத்திய மாகாண ஆளுநரால், ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்ட நிலையில் கிடைக்கப்பெற்ற விசாரணை அறிக்கைக்கு அமைய தவிசாளர், நகர சபைக் கட்டளைச் சட்டத்துக்கு எதிராகச் செயல்பட்டுள்ளார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த 29 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தலவாக்கலை லிந்துலை நகர சபை தவிசாளர் பதவி நீக்கப்பட்டுள்ளார். இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மத்திய மாகாண ஆளுநரால் வெளியிடப்பட்டுள்ளது. (எ)

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யக்கூடும்

கொழும்பு,பெப்.02

வடக்கு - கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தறை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் கண்டி மாவட்டங்களிலும் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 100 மில்லி மீற்றர் அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், மத்திய, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மழை நிலைமை: காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புக்களில் பல இடங்களில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புக்களில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காற்று: நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும். பலப்பிட்டியிலிருந்து கொழும்பு மற்றும் புத்தளம் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புக்களிலும் காற்றின் வேகமானது 25-35 கிலோ மீற்றர் வரை காணப்படுவதுடன் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. (எ)

## ஒரேநாளில் 21 ஆயிரம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன

கொழும்பு,பெப்.02

இலங்கையில் நேற்று முன்தினம் நாடு பூராகவும் 21 ஆயிரத்துக்கும் அதிகமான சுகாதார ஊழியர்களுக்கு ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனேகா தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதன்படி 21 ஆயிரத்து 329 பேருக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா தடுப்பூசி போடும் பணிகள் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிலையில், இதுவரை 60 பேருக்கு மேல் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

### ஈஸ்டர் தாக்குதல்:

# இறுதி விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு,பெப்.02

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்த அறிக்கை ஆணைக்குழுவின் தலைவர் உயர்நீதிமன்ற நீதிபதி ஜனக் டி சில்வா உள்ளிட்ட உறுப்பினர்களால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்ய 2019 ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி ஐவர் அடங்கிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

ஒன்றரை வருடகாலமாக சுமார் 650 நபர்களிடம் சாட்சியம் பெற்று விசாரணைகளை முன்னெடுத்து வந்த ஆணைக்குழுவின் செயல்பாடுகள் கடந்த 27 ஆம் திகதி நிறைவு பெற்றன.

இந்நிலையில் விசாரணைகளின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. (எ)

# சுதந்திர தினத்தில் தேசிய கீதம் தமிழிலும் இசைக்கப்பட வேண்டும்

கொழும்பு,பெப்.02

73 ஆவது சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதம் தமிழிலும் இசைக்கப்பட வேண்டும் என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பிரசாரச் செயலாளர் ஐ.எம்.ஹாரிப் கோரிக்கை விடுத்துள்ளார்.

73 ஆவது சுதந்திர தின நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சி காலத்தில் எமது நாட்டின் சுதந்திர தின நிகழ்வுகளில் தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

ஆனால் கடந்த வருடம் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படாதது பெரும் மனக்கவலையை இந்நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தியிருந்தது.

எனவே 4ஆம் திகதி நடைபெறவுள்ள 73ஆவது சுதந்திர தின நிகழ்வில் தமிழிலும் தேசியகீதம் இசைக்கப்பட வேண்டும் என்பது அனைத்து இன மக்களினதும் விருப்பமாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# கிழக்கு முனையம் இந்தியாவுக்கு திருகோணமலையில் போராட்டம்



**திருகோணமலை,பெப்.02**

**இலங்கை அரசாங்கம் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கு வதைக் கண்டித்து திருகோணமலையில் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

திருகோணமலை துறைமுக அதிகார சபையின் வாயிலில் அதன் ஊழியர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் இறுதியில் பேரணியாக ஒன்று திரண்டு, திருகோணமலை- மட்டக்களப்பு பிரதான வீதி வரை சென்ற போராட்டக்காரர்கள் அங்கு கோஷமிட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இலங்கை அரசாங்கமானது கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை மாத்திரமல்லாது தெற்கு பகுதியைக்கூட தாரை வார்ப்பதற்குத் தயாராகி வருகின்றது என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (எ)

# போராட்டங்களில் பங்கேற்க சாணக்கியன் எம்.பிக்கு தடை



களுவாஞ்சிக்குடி,பெப்.02

ஜனநாயக விரோத செயல் பாடுகளுக்கு எதிரான போராட்டங்களில் கலந்துகொள்வதற்கு தடை உத்தரவு என்று கூறி கட்டளைகள் வருகின்றன என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். இதேவேளை, ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களுக்கு எதிராகவே தடை உத்தரவுகள் போடப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான திட்டமிடப்பட்ட போராட்டத்தில் கலந்து கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வின் போது மக்களைத் தூண்டிவிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் இந்தப் போராட்டத்தை நடத்துவதாகத் தெரிவித்து பொலிஸார் தாக்கல் செய்த அறிக்கையின் பிரகாரம் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் போராட்டங்களை நடத்த நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இதுதொடர்பில் அறிவிப்புக்கள் பல்வேறு அரசியல் பிரமுகர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பதவி உயர்வுகளோ அல்லது பதவிகளோ கிடைப்பது போன்று தனக்கு நீதிமன்றத் தடை உத்தரவுகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன என இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

"இன்று (நேற்று) களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவினரால் எனக்கு மூன்றாம் திகதி முதல் ஆறாம் திகதி வரையிலான போராட்டத்தில் கலந்து கொள்வதனைத் தடை செய்யுமாறு களுவாஞ்சிக்குடி பொலிஸாரால் நீதிமன்றங்களை நாடி பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தரவு என்னிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதில் மிகவும் வேடிக்கையான விடயம் கொரோனாவைக் காரணம் காட்டி நீதிமன்றங்களை நாடியுள்ளனர்.

ஆனால், கொழும்பில் கிழக்கு முனைய துறைமுகத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு எதிராக ஆயிரக்கணக்கானவர்கள் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு பொலிஸாரால் தடை உத்தரவு வழங்க முடியாது. ஏனென்றால் அது அரசாங்கத்துடன் தொடர்புடையவிடயம்.

கடந்த காலத்தில் அரசியல் வாதிகளுடைய விடுதலை குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பிள்ளையானை விடுதலை செய்த போது நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இணைந்து முன்னெடுத்த வெற்றிக் கொண்டாட்டங்களுக்கு பொலிஸாரால் எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை"- என்றார். (எ)



# முகத்தை துணியால் மூடியவாறு தவிசாளருக்கு எதிராக போராட்டம்

மட்டக்களப்பு,பெப்.02

மட்டக்களப்பு கோறளைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராக சோபா ஜெயரஞ்சித் நேற்று மீண்டும் பதவியேற்றுள்ளமையைக் கண்டித்து எதிர்த்தரப்பினரால் பிரதேச சபைக்கு முன்பு கறுப்புத் துணியால் முகத்தை மூடிக் கட்டியவாறு கோஷங்களை எழுப்பி கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நீதி விசாரணை என்ன இழுத்தடிப்பா? அதிகாரிகளும் ஊழல் வாதிகளா?, ஆளுநரே வர்த்தமானி வெளியீடு விளையாட்டு படகா?, கிழக்கின் நிர்வாகம் யார் கையில், என்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு தமது எதிர்ப்பை தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# தாயும் பிள்ளையும் வெட்டுக்காயத்துடன் சடலங்களாக மீட்பு

அம்பாறை,பெப்.02

அம்பாறை - தமண பிரதேசத்தில் அம்பலன் ஓயா பகுதியில் தாயும் பிள்ளையும் வெட்டுக்காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப்பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்தே தாயும் பிள்ளையும் வெட்டுக்காயங்களுடன் இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட தாய் 33 வயதுடையவரெனவும் பிள்ளையின் வயது 10 எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதுடன் இந்த இருவரும் கூரிய ஆயுதத்தால் தக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ஆயிரம் ரூபா சம்பள விவகாரம்: வெள்ளிக்கிழமை போராட்டத்திற்கு

## செந்தில் தொண்டமான் அழைப்பு

கொழும்பு,பெப்.02

ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை முன்னிலைப்படுத்தி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அனைவரையும் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுமாறு பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளம் தொடர்பான கோரிக்கை அண்மைக்காலமாக பேசப்பட்டு வருகின்ற நிலையில், அமரர் ஆறுமுகம் தொண்டமானும் இது தொடர்பில் தற்போதைய அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்திருந்தார். அதற்கமைய அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. அதேபோன்று ஜனாதிபதி, பிரதமர் மட்டுமன்றி பெருந்தோட்டத்துறை அமைச்சர்களும் ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளம் தொடர்பில் கம்பனிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தனர். எனினும் அவை வெற்றியடையவில்லை.

இதற்கமைய எதிர்வரும் 6 ஆம் திகதி சம்பளம் தொடர்பான பேச்சுக்கள் இருப்பதால், 5 ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுமாறு அனைத்து பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் எம்மால் பெரும் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது. இதன் காரணமாகவே அன்றையதினம் அனைவரையும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுமாறு அழைப்பு விடுக்கின்றேன் எனத் தெரிவித்தார். (எ)

# ஐஸ், ஹெரோயின் போதைப்பொருளுடன் நான்கு பேர் கைது

கொழும்பு,பெப்.02

தலங்கம, கிம்புலாவல மற்றும் தலவத்துகொட ஆகிய பிரதேசங்களில்ஐஸ்மற்றும்ஹெரோயின் போதைப்பொருளுடன் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்களில் நாலக வன்னியாராச்சி டெரன்ஸ் தீபால் என்ற நபரொருவரும் உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர் 'தலவதுகொட பொத்தமா' என்ற பெயரில் பிரபலமானவர் என தெரிவிக்கப்படுகிறது.

தலங்கம பொலிஸ் நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்களிடமிருந்து 140 கிராம் ஐஸ் ரக போதைப் பொருளும் 13 கிராம் 800 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 26, 30, 34 மற்றும் 44 வயதுடைய தலவதுகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (எ)





# ரஷ்யாவில் புடினுக்கு எதிராக பேராட்டம்: 5,000 பேர் கைது

மொஸ்கோ, பெப். 02

ரஷ்யாவில் ஜனாதிபதி புடினுக்கு எதிராக தலைநகர் மொஸ்கோ உட்பட முக்கிய நகரங்களில் போராட்டத்தில் ஈடுபட்ட 5ஆயிரம் பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னி மீது நடத்தப்பட்ட நச்சு தாக்குதலால் கோமா நிலைக்கு சென்றார். ஜேர்மனியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அவர் வழமைக்கு திரும்பி கடந்த மாதம் 17ஆம் திகதி ரஷ்யா திரும்பினார்.

மொஸ்கோ விமான நிலையத்தில் வைத்து பிணை விதிகளை மீறினார் என்ற குற்றச்சாட்டில் நவால்னி கைது செய்யப்பட்டார். அவரின் கைதுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளில் இருந்தும் கடும் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டன.

அத்துடன், அவரின் கைதை வலி யுறுத்தி ரஷ்யாவில் பல போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த இரு நாட்களாகப் போராட்டம் தீவிரமடைந்தது. இந்நிலையில் மொஸ்கோ லுபியங்கோ சதுக்கத்தில் போராட்டத்திற்கு நேற்றுமுன்தினம் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், பொலிஸார் அந்த இடத்துக்குள் போராட்டக்காரர்கள் நுழைய முடியாதவாறு பலத்த பாதுகாப்பை ஏற்படுத்தினர். இதனால், அந்தப் பகுதியிலுள்ள வீதிகளில் போராட்டக்காரர்கள் தமது போராட்டங்களை தொடர்ந்தனர்.

இதைத் தொடர்ந்து வீதிகளில் போராடிய சுமார் 5 ஆயிரம் பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. (ஐ)

# இராமர் பாலம் மனிதன் கட்டியதா? முழுஅளவிலான ஆய்வில் இந்தியா!

புதுடில்லி, பெப். 02

இராமர் பாலத்தை ஆய்வு செய்வதற்கு தனது முதல் அறிவியல் பயணத்தை இந்தியா விரைவில் நடத்தவுள்ளது.

இந்தியா - இலங்கை இடையே 48 கி.மீற்றர் நீளமான பாலம் போன்ற அமைப்பு உள்ளது. வானரப் படையின் உதவியுடன் இதனை இராமர் அமைத்தார் என்று இராமாயண காவியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இதன் உருவாக்கம் குறித்து அதிகம் அறியப்படவில்லை. அத்துடன், அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை.




இந்நிலையில், இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்தின் கீழ் இயங்கும் வண்டல் மற்றும் அறிவியல் சார் ஆய்வை மேற்கொள்ளும் கோவாவைத் தளமாகக் கொண்ட தேசிய கடல் சார் நிறுவனம் ஆய்வுத் திட்டம் ஒன்றை சமர்ப்பித்துள்ளது. இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, இராமர் பாலம் மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பா? இல்லையா? என்பதை ஆராய்வதுடன், அதன் வயதை அறிவியல்பூர்வமாக நிறுவுவது முக்கிய நோக்கமாகும் என்று தேசிய கடல்சார் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் சுனில் குமார் சிங் குறிப்பிட்டார்.

காபன் படிவங்களை ஆராயும் நுட்பங்கள் இப்போது இந்தியாவில் கிடைக்கின்றன. இந்த நுட்பம் வண்டல்களின் வயதைத் தீர்மானிக்க பயன்படுத்தப்படும். பரவலாக ஆய்வாளர்கள் இராமர் பாலத்தைத் தேட முயற்சிக்கும்போது பல விஞ்ஞான நுட்பங்களை பயன்படுத்துவார்கள். இதன்போது பாலத்தின் அமைப்பையும் ஆராய்வார்கள். அதேநேரம் தளத்திலிருந்து ஏதாவது எச்சங்கள் அல்லது கலைப் பொருட்கள் ஏதேனும் கிடைக்கிறதா என்று தோண்டிப் பார்ப்பார்கள்.

இந்தத் திட்டம் மார்ச் மாத இறுதிக்குள் முழுமையாகத் தொடங்கி விடும். ஆரம்பத்தில் நீருக்கடியில் ஏதேனும் வசிப்பிடங்கள் நீரில் மூழ்கியிருக்கிறதா என்று ஒளிப்படங்கள் எடுக் கப்பட்டு ஆராயப்படும். பல ஆண்டுகளாக மணல் உட்பட பல வகையான படிவுகள் உண் மையான கட்டமைப்பை உள்ளக்கியுள்ளன. ஆரம்பத்தில் வெறும் கண்காணிப்பே இருக்கும். துளையிட்டு ஆராய்தல் இருக்காது. அறிவியல் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும்.

அந்த இடத்தின் கட்டமைப்பு முழுமையாகப் புரிந்து கொள்ளப்பட்ட பின்னர், துளையிட்டு மாதிரிகளை சேகரித்து ஆய்வக அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இந்தப் பாலத்திற்கான அடிப்படை மர அடுக்குகள் என்று குறிப்பிடப்படுகின்றன. அப்படியானால் அவை புதைபடிவமாக இருக்க வேண்டும். அதை நாங்கள் கண்டுபிடிக்க முயற்சிப்போம். உயர்நிலை நுட்பங்களை பயன்படுத்தி பவளத் திட்டுக்களை தேடுவோம். இவை இந்தியாவின் ஆய்வகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் சுனில்குமார் சிங் குறிப்பிட்டார்.

இராமர் பாலத்தை சுற்றியுள்ள இடம் ஆழமற்றது. இது 3-4 மீற்றருக்கு மேல் இல்லை. உள்ளூர் படகுகள் இதன்வழியாக செல்ல முடியும். ஆனால், கப்பல்கள் - பெரிய கப்பல்கள் செல்லமுடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சீனாவின் கடும் எதிர்ப்பை மீறி ஹொங்கொங்கிற்கு சிறப்பு விஸா!

## இங்கிலாந்தின் திட்டம் நடைமுறை

லண்டன், பெப். 02

சீனாவின் கடும் எதிர்ப்பையும் மீறி ஹொங்கொங் நாட்டவர்கள் இங்கிலாந்தில் 5 வருடங்கள் வசிப்பதற்கு விண்ணப்பிக்க முடியும் என்ற திட்டத்தை இங்கிலாந்து நடைமுறைப்படுத்தியுள்ளது.

ஹொங்கொங் மக்களுக்கு இங்கிலாந்து வழங்கிய கடவுச்சீட்டு இனி செல்லாது என்று சீனா அறிவித்த நிலையில், இந்தப் புதிய விஸா திட்டத்துக்கு 3 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் விண்ணப்பிப்பார்கள் என்று இங்கிலாந்து தெரிவித்துள்ளது.

ஹொங்கொங் மக்களுக்கான புதிய விஸா திட்டம் குறித்து இங்கிலாந்து பிரதமர் பொறிஸ் ஜோன்சன் கூறுகையில், "இந்த நடவடிக்கை இங்கிலாந்தின் முன்னணி காலனியான ஹொங்கொங்குடன் இங்கிலாந்தின் வரலாறு மற்றும் நட்பின் ஆழமான உறவுகளை கௌரவிக்கிறது" என்றார். (ஐ)

# 11 நாடுகளின் கூட்டமைப்பில் இணைய பிரிட்டன் விருப்பம்!



லண்டன், பெப். 02

ஆசியா - பசுபிக் பிராந்தியத்தை சேர்ந்த 11 வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகள் அடங்கிய, கூட்டமைப்பில் இணையப் போவதாக, ஐரோப்பிய நாடான, பிரிட்டன் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து, பிரிட்டன், கடந்த ஆண்டு, ஜனவரியில் முறைப்படி வெளியேறியது. அதைத் தொடர்ந்து, மற்ற நாடுகளுடன், தொழில் மற்றும் வர்த்தக உறவுக்கான முயற்சி களில் பிரிட்டன் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், 11 நாடுகள் அடங்கிய, டிரான்ஸ் பசுபிக் ஒத்து ழைப்புக்கான கூட்டமைப்பில் இணைவதற்கு, பிரிட்டன் விண்ணப்பித்துள்ளது. இதை பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியா, புருனே, கனடா, சிலி, ஜப்பான், மலேசியா, மெக்சிகோ, நியூசிலாந்து, பெரு, சிங்கப்பூர் மற்றும் வியட்நாம் ஆகியவை இந்த கூட்டமைப்பில் உள்ளன.



# உலக நிபுணர் குழு வுஹானில் ஆய்வு!

பீஜிங், பெப். 02

கொரோனா வைரஸ், முதலில் தோன்றியதாகக் கருதப்படும், சீனாவின் வுஹான் நகர சந்தையில், உலக சுகாதார அமைப்பின் நிபுணர் குழுவினர் நேற்று முன்தினம் ஆய்வு செய்தனர்.

கொரோனா தோற்றம் குறித்து உலக சுகாதார அமைப்பின் நிபுணர் குழு நீண்ட இழுபறியின் பின்னர் ஆய்வு செய்வதற்கு சீனா அனுமதித்தது.

இதன்படி, உலக சுகாதார அமைப்பின் குழுவினர், தற்போது சீனாவில் உள்ளனர். இந்தக் குழுவில், கால்நடை மருத்துவர், வைரஸ் நிபுணர்கள், உணவு பாதுகாப்பு மற்றும் தொற்று நோயியல் வல்லுநர்கள் உள்ளனர்.

இவர்கள் முதல் கட்டமாக கொரோனா தொற்றின் முதல் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களை சந்தித்துப் பேசினர்.

இதைத் தொடர்ந்து கொரோனா வைரஸ் தோற்றம் பெற்றதாக நம்பப்படும் வுஹான் சந்தையை நேற்றுமுன்தினம் ஆய்வுக்கு உட்படுத்தினர்.

இந்தக் குழு வுஹானில் உள்ள வைரஸ் ஆய்வகம் உள்ளிட்ட இடங்களையும் ஆராயவுள்ளனர். (ஐ)

# 5,000 தடுப்பூசிகளை பலஸ்தீனத்திற்கு வழங்குகிறது இஸ்ரேல்



ஜெருசலேம், பெப். 02

பலஸ்தீனத்திற்கு 5 ஆயிரம் கொரோனா தடுப்பூசிகளை இஸ்ரேல் வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பூசியை மக்களுக்கு செலுத்தும் பணியை இஸ்ரேல் ஆரம்பித்துள்ளது. இதனிடையே, இஸ்ரேல் தனது அயல் நாடான பலஸ்தீனத்திற்கு தடுப்பூசிகளை வழங்க மறுத்து வருகின்றது என்று ஐ.நாவும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளும் குற்றம் சாட்டின.

இந்த விடயத்தில் நீண்ட இழுபறிக்குப் பின்னர் பலஸ்தீனத்துக்கு கொரோனா தடுப்பூசிகளை வழங்க இஸ்ரேல் சம்மதம் தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில், பலஸ்தீனத்தில் முன்கள பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் 5 ஆயிரம் தடுப்பூசிகளை இஸ்ரேல் வழங்கவுள்ளது என்று அந்நாட்டின் இராணுவ அமைச்சர் பென்னி காண்ட்ஸ் தெரிவித்தார். (ஐ)




# மெஸ்ஸியின் மதிப்பு 11,775 கோடி ரூபா!

பார்ஸிலோனா, பெப். 02

ஆர்ஜென்ரீன உதைபந்தாட்ட வீரர் மெஸ்ஸியை 4 வருடங்களுக்கு 11 ஆயிரத்து 775 கோடி ரூபாவுக்கு பார்ஸிலோனா அணி ஒப்பந்தம் செய்துள்ளது.

இன்னமும் உறுதி செய்யப்படாத இந்தத் தகவல் உண்மையாக இருக்கும்பட்சத்தில், விளையாட்டு உலகில் தனி ஒரு வீரர் ஒப்பந்தம் செய்யப்பட்ட அதிக பட்ச தொகை இதுவாக இருக்கும் என்று கூறப்படு கின்றது.

2004ஆம் ஆண்டு தொடக்கம் பார்ஸிலோனா அணிக்காக விளையாடும் மெஸ்ஸி, பல சாதனைகளை படைத்துள்ளார். அத்துடன் அந்த அணிக்கு தலைமை தாங்கி 30இற்கும் மேற்பட்ட சம்பியன்களை வென் றுள்ளார்.

எனினும், தாம் எதிர்பார்த்தளவு முன்னேற்றம் இல்லை என்று அதிருப்தி வெளியிட்டுள்ள மெஸ்ஸி பார்ஸிலோனா அணியிலிருந்து வெளியேறப் போகிறேன் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், கடந்த 2017 முதல் 4 ஆண்டுகளுக்கு பார்ஸிலோனா அணிக்காக விளையாடுவதற்காக அவர் 11 ஆயிரத்து 775 கோடி இலங்கை ரூபா மதிப்பிலான ஒப்பந்தத்தில் இணைந்துள்ளார் என்று ஸ்பெயினில் வெளியாகும் 'எல்முன்டோ' பத்திரிகை செய்தி வெளி யிட்டுள்ளது.

இதன் தகவல்படி, ஓர் ஆண்டுக்கான மெஸ்ஸியின் சம்பளம் சுமார் 2ஆயிரத்து 920 கோடி ரூபாவாகும். இதில் நிர்ணயிக்கப்பட்ட வருமானத்துடன் இதர இலா பங்களும் உண்டு. எனினும், ஸ்பெயின் வரி சட்டங்க ளின்படி, இந்தத் தொகையில் பாதியை வரியாக மெஸ்ஸி செலுத்தியிருக்க வேண்டியிருந்திருக்கும்.

ஒப்பந்தத்தின் மொத்த மதிப்பில் சுமார் 10 ஆயிரத்து 800 கோடி ரூபாவை மெஸ்ஸி ஏற்கனவே பெற்றுவிட் டார் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், இந்த செய்திக்கு எதிராக சட்ட நடவ டிக்கை எடுக்கப் போவதாக பார்ஸிலோனா கழகம் அறிவித்துள்ளது. ஆனால், வெளியான தகவல்களை மறுக்கவும் இல்லை. அதேநேரம் ஏற்றுக்கொள்ளவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தென்னாபிரிக்காவுடனான ரி-20:

# பாகிஸ்தான் அணியில் முஹம்மது ஹபீஸ் 'அவுட்'

இஸ்லாமாபாத், பெப். 02

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபது - 20 தொடரில் பாகிஸ்தான் அணியில் மூத்த வீரர் முஹமது ஹபீஸ் நீக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை யில் ஒப்பந்தத்தில் இல்லாத முகமது ஹபீஸ், தற்போது ஐக்கிய அரபு எமிரேட்ஸில் 10 ஓவர் கிரிக்கெட் போட்டியில் விளையாடி வருகிறார்.

இந்நிலையில், தென்னாபிரிக்கா வுக்கு எதிரான இருபது - 20 தொட ரில் விளையாட இருக்கும் வீரர்கள் தனிமைப்படுத்தல் வலயத்தில் இருக் கும் அவர் நாளை அணியுடன் இணைய வேண்டும் என்று அறிவு றுத்தியுள்ளது.

பத்து - 10 போட்டியில் இருப் பதால் நாளைய தினத்தின் பின்னர் அணியுடன் இணைவதற்கு முஹக மது ஹபீஸ் அனுமதி கேட்டிருந்




தார். இதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மறுத்துவிட்டது.

கடந்த ஆண்டு இருபது - 20 போட்டிகளில் சிறப்பான ஆட் டத்தை ஹபீஸ் வெளிப்படுத்தியிருந் தார். அவர் 10 போட்டிகளில் 453 ஓட்டங்களை சேர்த்திருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் - தென்னாபிரிக்கா அணிகளின் இருபது - 20 தொடர் எதிர்வரும், 11, 13, 14ஆம் திகதிக ளில் தொடர் லாகூரில் பிப்ரவரி 11, 13, 14 ஆகிய நாள்களில் நடை பெறவுள்ளது.

**அணி விவரம்:**

பாபர் அஸாம் (அணித் தலைவர்), ஹைதர் அலி, குஷ்தில் ஷா, ஹூ சைன் தலத், டேனிஷ் அஸிஸ், ஆசிப் அலி, இப்திகார் அஹமட், முஹமது நவாஸ், ஜாபர் கோஹர், பஹீம் அஷ்ரப், அமர் யாமின், அமத் பட், முஹமது ரிஸ்வான், சர்ப்ராஸ் அஹமது, ஷாஹீன் அப்ரிடி, ஹரிஸ் ரௌப், முஹமது ஹஸ்னைன், ஹசன் அலி, உஸ்மான் காதிர், ஜாஹித் மஹ்மூத்.

# சிட்னியை வீழ்த்தியது பிரிஸ்பேன்!

கன்பெரா, பெப். 02

கன்பெராவில் நடந்த பிக்பாஷ் லீக் போட்டியில் சிட்னி தண்டர் அணியை வீழ்த்தி பிரிஸ்பேன் ஹீட் அணி சலஞ்சர் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

பிக் பாஷ் லீக் போட்டியின் நொக் அவுட் சுற்று கன்பெரா மைதானத்தில் நடைபெற்றது. இதில் சிட்னி தண்டர், பிரிஸ்பேன் ஹீட் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பிரிஸ்பேன் ஹீட் அணி முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது.

இதையடுத்து சிட்னி தண்டர் அணி களமிறங்கியது. அந்த அணியின் பில்லிங்ஸ், கட்டிங் ஆகியோர் தலா 34 ஓட்டங்களையும், தொடக்க ஆட்டக்காரார் கவாஜா 28 ஓட்டங்களையும், பெர்குசன் 25 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில், சிட்னி தண்டர் அணி நிர்ணயிக்கப் பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 158 ஓட்டங் களை எடுத்தது.

இதையடுத்து 159 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பிரிஸ்பேன் ஹீட் ஆடியது. தொடக்க ஆட்டக்காரர்கள் ஜோ டென்லி டக் அவுட் ஆனார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் கிறிஸ் லின் 10 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து இறங்கிய லபுஸ்சாக்னே 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இறங்கிய சாம் ஹீஸ்லெட்டும் ஜிம்மி பியர்சன் அதிரடியாக ஆடினர். ஹீஸ்லெட் பொறுப்பு டன் ஆடி அரைச்சதமடித்து அதிரடி காட்டினார்.

இறுதியில், பிரிஸ்பேன் ஹீட் அணி 19.1 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 162 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. அத்துடன் சலஞ்சர் சுற்றுக்கும் முன்னேறி யது. ஹீஸ்லெட் 74 ஓட்டங்களுடனும் பியர்சன் 43 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சேலஞ்சர் போட்டி நாளை மறுதினம் நடக்கவுள் ளது. இதில், பேர்த் ஸ்கார்சர்ஸ் அணியை எதிர்கொள் கிறது பிரிஸ்பேன் ஹீட் அணி. இதில் வெற்றி பெறும் அணி 6ஆம் திகதி நடக்கவுள்ள இறுதியாட்டத்தில் சிட்னி சிக்சர்ஸ் அணியை சந்திக்கிறது.






# தங்கள் குழந்தையின் பெயரையும் படத்தையும் பகிர்ந்தார் கோலி

புதுடில்லி, பெப். 02

விராட் கோலி - அனுஷ்கா சர்மா தங்கள் குழந்தைக்கு வாமிகா எனப் பெயரிடப்பட்டுள்ளனர்.

விராட் கோலியும், அனுஷ்கா சர்மாவும் கடந்த 2017இல் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். இதையடுத்து கர்ப்பமான அனுஷ்கா சர்மா கடந்த ஜனவரி மாதம் பெண் குழந்தையை பெற்றெடுத்தார்.

தனக்குப் பெண் குழந்தை பிறந்ததை ருவிட்டரில் குறிப்பிட்ட கோலி, 'எங்களுக்கு பெண் குழந்தை பிறந் திருக்கிறது. அனைவருடைய அன்புக்கும் பிரார்த்த னைக்கும், வாழ்த்துகளுக்கும் நன்றி. தாயும், சேயும் நலமாக உள்ளனர்", என்று குறிப்பிட்டார். இந்நிலை யில் குழந்தையுடன் பெற்றோர் எடுத்துக்கொண்ட ஒளிப்படம் வெளியாகியுள்ளது. படத்தைப் பகிர்ந்த நடிகை அனுஷ்கா சர்மா, குழந்தைக்கு வாமிகா எனப் பெயரிடப்பட்டுள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.(ஐ)

## இங்கிலாந்து - இந்தியா டெஸ்ட்:

# இரண்டாவது போட்டியில் ரசிகர்களுக்கு அனுமதி

சென்னை, பெப். 02

இங்கிலாந்து - இந்திய அணிகள் மோதும் இரண்டா வது டெஸ்ட் போட்டியில் 50வீதமான ரசிகர்களை அனும திக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை முடிவு செய்துள்ளது.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி, அந்நாட்டு அணியுடன் 4 டெஸ்ட், 5 இருபது - 20 போட்டிகள், 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இரு அணிகளிடையேயுமான முதல் டெஸ்ட் போட்டி வரும் 5ஆம் திகதியும், இரண்டாவது போட்டி 13ஆம் திகதியும் சென்னை - சேப்பாக்கம் மைதானத்தில் இடம் பெறவுள்ளன. கொரோனா தொற்று அச்சம் காரணமாக இந்தப் போட்டிகளைப் பார்வையிட ரசிகர்கள் அனும திக்கப்பட மாட்டார்கள் என்று தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் அறிவித்திருந்தது. இந்நிலையில், இரண்டாவது போட்டியில் 50 வீதமான ரசிகர்களை அனுமதிக்கப்படு வர் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# உறவுகளை விடுதலை செய்யக்கோரி கிளிநொச்சியில் மறியல் போராட்டம்



கிளிநொச்சி,பெப்.02

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை விடுதலை செய்யக்கோரி கிளிநொச்சியில் தொடர் போராட்டமொன்று நேற்றுக்காலை முன்னெடுக்கப்பட்டது.**

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பு ஒன்று கூடிய உறவுகள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து ஏ-9 பிரதான வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டு கொண்டிருந்த நிலையில் போக்குவரத்து சில நிமிடங்கள் தடைப்பட்டன.

இதேவேளை, கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் பொலிஸார், போக்குவரத்தை சீர்செய்ய முற்பட்டனர். எனினும் போக்குவரத்தை முழுமையாகச் சீர்செய்ய முடியாத நிலையில் அதற்கு ஒத்துழைக்குமாறு பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களிடம் கேட்டனர். அதற்கு அமைய வீதியின் ஒரு பகுதியின் ஊடான போக்குவரத்து இடம்பெற்றது.

இதன்போது சம்பவ இடத்துக்கு வருகைதந்த கிளிநொச்சி தலைமை பொலிஸ் அதிகாரி தலைமையிலான பொலிஸார், போராட்டக்காரர்களை வீதியிலிருந்து கரைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர். இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. மேலும் கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் நேற்று முதல் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்தனர். (எ)

# இந்தியத் தடுப்பூசி வேண்டும்; முதலீட்டாளர்கள் வேண்டாம்

## இது என்ன நியாயம் என்று கேட்கிறார் இராதாகிருஷ்ணன்

கொழும்பு,பெப்.02

இந்தியா இலவசமாக வழங்கிய கொரோனா தடுப்பூசியை எந்த எதிர்ப்பும் இல்லாமல் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் அங்கிருந்து வருகின்ற முதலீட்டாளர்களை அனுமதிக்கக் கூடாது என எதிர்ப்புத் தெரிவிப்பது எந்த விதத்தில் நியாயமானது என மலையக மக்கள் முன்னணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தின் ஒரு பகுதியை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் குறித்து வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்திய முதலீட்டாளர்களை இலங்கையில் அனுமதிக்கக் கூடாது என எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றவர்கள் ஏன் அங்கிருந்து வந்த கொரோனா தடுப்பூசியை திருப்பி அனுப்பவில்லை? ஏனென்றால் அது உயிரைப் பாதுகாக்கின்ற காலத்தின் தேவையாக இருக்கின்றது. தேவைக்குப் பயன்படுத்தி விட்டு தூக்கி எறிகின்ற எண்ணத்திலேயே இன்று பல கட்சிகள் செயல்பட்டு வருகின்றன. அதற்கு அவர்கள் வைத்துள்ள பெயர்தான் தேசப்பற்றாளர்கள்.

இந்தியாவின் முதலீட்டாளர்களுக்கு துறைமுகத்தின் ஒரு பகுதியை நிர்வகிப்பதற்கு எதிராகக் கோஷமிடுவது எமது பொருளாதாரத்துக்கு அடிக்கப்படும் சாவு மணியாகும். ஏனெனில் எதிர்காலத்தில் இன்னும் பல இந்திய முதலீட்டாளர்கள் இலங்கையில் தங்களுடைய முதலீடுகளை செய்வதற்குத் தயாராக இருக்கின்ற இந்நிலையில் அவர்களுக்குப் பாதுகாப்பற்ற ஒரு நிலைமை ஏற்படுமாக இருந்தால் அவர்கள் எப்படி முதலீடுகளை இலங்கையில் செய்வார்கள்?

எங்களுடைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக ஏனைய நாடுகளுடன் இணைந்து செயல்பட வேண்டும். தனியே நாங்கள் மாத்திரம் இந்தப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. மேலும் இந்தியா என்பது எங்களுடைய அயல்நாடு. அவர்களுடன் எங்களுக்கு கடந்த பல தசாப்தங்களாக நெருங்கிய உறவு அனைத்து வழிகளிலும் இருக்கின்றது.

நாங்கள் எல்லாவற்றையும் சீனாவுக்கு மாத்திரம் வழங்குவதால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. இந்தியா சீனா உட்பட ஏனைய நாடுகளுடனும் இணைந்து செயல்படுவதற்கு நாம் தயாராக வேண்டும்.

இன்று தேசப்பற்றாளர்கள் எனக் கூறிக் கொள்கின்றவர்கள் எந்தவிதமான கொள்கையும் இல்லாதவர்கள் என்பதை நாங்கள் கடந்த கால அனுபவத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

எந்த நாடுகளுக்கு எதிராகக் கோஷம் போடுகின்றார்களோ அந்த நாடுகளில் சென்று யாருக்கும் தெரியாமல் உல்லாசம் அனுபவித்து விட்டு வருகின்றவர்கள் தான் இந்தத் தேசப்பற்றாளர்கள். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இவர்கள் கூறியதை நினைத்துப் பார்த்தால் சிரிப்பு தான் வருகின்றது.

இன்று இந்த எதிர்ப்பு காரணமாக எங்களுடைய பொருளாதாரம் இன்னும் பின்னடைவை சந்திக்குமே தவிர முன்னேற்றம் ஏற்படாது. அதனை அரசாங்கமும் தற்பொழுது நன்கு உணர்ந்துள்ளது. எனவே வீணாக எதிர்ப்பை காட்டுவதை விட்டு விட்டு வருகின்ற முதலீட்டாளர்களுக்கு தேவையான வசதிகளை பெற்றுக் கொடுத்து எங்களுடைய நாட்டின் தனித் தன்மையை விட்டுக் கொடுக்காமல் செயற்படுவதற்கு அனைவரும் முயற்சி செய்ய வேண்டும்.

இன்று எதிர்ப்புக் கோஷம் எழுப்புகின்ற பலரும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டால் பாதிக்கப்படுகின்றவர்கள் அல்ல. அந்தப் பாதிப்புக்கு உள்ளாகின்றவர்கள் பொது மக்களே. எனவே நாட்டு மக்களின் நன்மை கருதியே நாங்கள் செயல்பட வேண்டுமே தவிர வெறுமனே எதிர்ப்புக் கோஷமிடுவதால் எதனையும் சாதிக்க முடியாது- என்றார். (எ)

# அமைச்சர் பவித்ராவுக்கு எதிராக உண்மைக்குப் புறம்பான செய்தி

## சுகாதார அமைச்சு விளக்கம்

கொழும்பு,பெப்.02

சமூக வலைத்தளங்களில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு எதிராக வெளியிடப்பட்ட உண்மைக்குப் புறம்பான தகவல்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பவித்ரா வன்னியாராச்சிக்கு அண்மையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் வைத்திய சாலையில் குறைபாடுகள் காணப்படுவதாக முறைப்பாடுகளை முன்வைத்து அவர் வீடு திரும்பியுள்ளார் என சமூக வலைத்



தளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

எனினும் இந்தச் செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என சுகாதார அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தொடர்ந்தும் தேசிய தொற்றுநோய் வைத்திய சாலையிலே சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# வர்த்தக அமைச்சின் செயலருக்கு கொரோனா

கொழும்பு,பெப்.02

வர்த்தக அமைச்சின் செயலாளர் பத்ரானி ஜெயவர்த்தன கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் முடிவுகள் நேற்று வெளியாகிய நிலையிலேயே கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

தற்போது அவர் ஒரு மருத்துவ நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், வர்த்தக அமைச்சில் உள்ள அவரது அலுவலக அறை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (எ)

# மலையக பாடசாலைகளில் மாணவர் வருகை வீழ்ச்சி

ஹற்றன்,பெப்.02

மலையகத்தில் சுகாதார நடைமுறைகளுடன் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகியிருந்தாலும், மாணவர்களின் வருகை என்பது இன்னும் முழுமையாக இல்லை என தரவுகள் தெரிவிக்கின்றன.

பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளில் மாணவர்களின் வருகை 30 வீதத்துக்கும் குறைவாகவே உள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பாடசாலை நிர்வாகத்தினர் சமுகமளிக்கின்ற போதிலும், மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு பெற்றோர் சிலர் இன்னும் தயக்கம் காட்டும் நிலை நீடிக்கிறது.

சமூக இடைவெளியைப் பேணுவதற்கு ஒரு வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு இரண்டு கட்டங்களாக கல்வி நடவடிக்கை இடம்பெறுகின்ற நிலையிலும், 100 சதவீத வருகை இன்னும் உறுதியாகவில்லை.

குறிப்பாக ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட ஹற்றன் ஸ்ரீபாத சிங்கள பாடசாலையில் சுமார் 600 மாணவர்கள் கல்வி கற்கும் நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை ஆறு மாணவர்கள் மாத்திரமே வருகை தந்திருந்தனர் என பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இப்பாடசாலையில் தரம் - 3 இல் கல்வி கற்கும் மாணவனுக்கு அண்மையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதன்பின்னரே மாணவர்களின் வருகை மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. (எ)

# துறைமுக அதிகார சபையின் கீழ் கிழக்கு முனையம் பராமரிக்கப்படும்

## பிரதமர் மஹிந்த உறுதி

கொழும்பு,பெப்.02

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் முழுமையாக துறைமுக அதிகார சபையின் கீழ் பராமரிக்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை சுதந்திர சேவையர் சங்கத்தின் தலைவர் பிரசன்ன கலுதரகே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தைப் பாதுகாக்கும் தொழிற்சங்க கூட்டு மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடையில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பிரசன்ன கலுதரகே மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொழும்பு துறைமுக கிழக்கு முனையம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் தொடர்பான அறிவிப்பு இன்று கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். பிரதமர் எமக்கு வழங்கிய உறுதிமொழி இன்று நிறைவேற்றப்படும் என நம்புகின்றோம்.

இதுதொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு வரும் வரையில் நாம் தொழிற்சங்கப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை. இன்று உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியான பின்னர் தொழிற்சங்கப் போராட்டம் கைவிடப்படும்.

அமைச்சரவைத் தீர்மானத்தில் வேறு விடயங்கள் இருந்தால் எமது தொழிற்சங்கப் போராட்டத்தைக் கைவிடமாட்டோம்- என்றார். (எ)




# தமிழ் தேசிய பசுமை இயக்கத்தால் மாணவர்களுக்கு குறிப்பேடுகள்!

மட்டக்களப்பு, பெப். 02

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிமனையால் களுவாஞ்சிக்குடியில் எருவில் மற்றும் சூரையடி கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குக் அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் இ. சூரியகுமார் கலந்து கொண்டு கொப்பிகளை வழங்கி வைத்தார்.

இதன்போது கருத்துரைத்த இ.சூரியகுமார், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டு தோறும் புதிய கல்வியாண்டு ஆரம்பிக்கும்போது பின்தங்கிய கிராமப்புற மாணவர்களுக்குக் குறிப்பேடுகளை வழங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளது.

பல்வேறு மாவட்டங்களிலும் இப்பணி இடம்பெற்று வருகின்றது. அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதற்கட்டமாக களுவாஞ்சிக்குடியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு குறிப்பேடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் விரைவில் வழங்கி வைக்கப்பட உள்ளது.

இக்குறிப்பேடுகள் மாணவர்களின் கற்றலுக்கு உதவுவனவாக மாத்திரமல்லாமல் அவர்களிடையே சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மரநடுகை தொடர்பான அக்கறையை வளர்த்தெடுக்கவும் உதவுகின்றன. இதற்கேற்ப குறிப்பேடுகளின் அட்டைகள் விழிப்புணர்வுப் படங்களையும் அறிஞர்களின் மேற்கோள்களையும் தாங்கியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளன - என்றார். (ஐ)

## வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்று

# நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 02

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் வழங்குமாறு வலியுறுத்தி நேற்று வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டம் குறித்து அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

"யுத்த காலத்திலும் அதற்கு பின்னரான தற்போதைய காலத்திலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் எந்தவித கொடுப்பனவுகளும் இல்லாமல் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள், சேவை அடிப்படையில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வருகின்றோம். ஆகையினால், எமக்கான நிரந்தர நியமனத்தை வழங்க வலியுறுத்தி கடந்த பல வருடங்களாக நாம் தொடர்ச்சியான போராட்டங்களை நாம் முன்னெடுத்து வந்திருந்தோம்.

ஆயினும், எங்களின் கோரிக்கைகளுக்கு உரிய தரப்பினர் செவிசாய்க்காத நிலையில்



மீண்டும் நாம் போராடும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். ஆகவே, வடக்கில் நீண்ட காலமாக தொண்டராசிரியர்களாக இருக்கின்ற எங்களுக்கான நிரந்தர நியமனத்தை உடனடியாக சம்பந்தப்பட்ட தரப்பினர் வழங்க வேண்டும் என்று கோரி இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

இதன்போது, ஆளுநரின் செயலாளரிடம் எமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றையும் கையளித்துள்ளோம். ஆகையினால் எமது கோரிக்கைகளுக்கமைய நிரந்தர நியமனம் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யும் வகையில் உரிய பதில் கிடைக்க வேண்டும். அதே நேரத்தில் எமக்கான நியமனம் கிடைக்க வேண்டும். அவ்வாறு கிடைக்காத இடத்தில் நாம் தொடர்ச்சியான போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்கத் தீர்மானித்திருக்கிறோம்" - என்று கூறினர். (ஐ)

# பேஸ்புக்கில் அவதூறு பொலிஸில் முறைப்பாடு

முல்லைத்தீவு, பெப். 02

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள சமூக செயற்பாட்டாளர்கள் சிலரை போலி பேஸ்புக் பக்கம் ஊடாக அவதூறான பரப்புரையை மேற்கொண்ட சம்பவம் தொடர்பில், விசுவமடு பகுதி யில் வசிக்கும் சமூக செயற்பாட் டாளர் ஒருவர், புதுக்குடியி ருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ், கிராம சேவையாளரை மாற்றவேண் டாம் எனக் கூறிய பொது அமைப்புக்களின் பிரதிநிதி களை பற்றி போலி பேஸ்புக்கில் அவதூறு பரப்பப்பட்டுள்ள தாக, அதன் ஆவணங்களுடன் குறித்த முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

# சிங்கள அடக்குமுறைகளுக்கு எதிராக நாளை இணைவோம்!

## கலையரசன் எம்.பி. அழைப்பு

திருக்கோவில், பெப். 02

சிங்கள அடக்குமுறைக்கு எதிராக எமது எதிர்ப்பை சர்வ தேசத்திற்கு ஒன்றிணைந்து காட்டுவோம் என்று பொத்து வில் முதல் பொலிகண்டி வரை போராட்டத்திற்கு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன்.

அம்பாறை - திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் கட்சி பிரதானிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

வட, கிழக்கு மாகாணங்களில் நாளை அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ள மாபெரும் அமைதி பேரணிக்கு எங்கள் மக்கள் பூரண ஆதரவை வழங்க வேண்டும். ஏனென்றால், வட, கிழக்கு பிரதேசங்களில் தமிழர் களின் 200இற்கும் மேற்பட்ட ஆலயங்கள் அதே போன்று எங்களுடைய பாரம்பரிய பிரதேசங்கள் வனபரிபாலன இலாகா, தொல்பொருள் திணைக்களத்தினால் கபளீகரமான நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுத்து கொண்டு வருகின்றது.

இவ்வாறு எம் தமிழ் மக்களுக்கு இடம்பெறும் அநீதிகளுக்கு எதிராக எமது பூரணமான ஆதரவை தமிழ் தேசிய கூட்டமைப்பும் வழங்கவுள்ளது. இதற்கு அம்பாறை மாவட்ட தமிழர்களும் ஆதரவை வழங்க வேண்டும்.

போர் முடிந்த கையோடு கிட்டத்தட்ட 12 வருடங்களாக திணிக்கப்பட்ட அடக்கு முறையை சந்தித்த எமது தமிழ் மக்கள் இப்போது மோசமான காலசூழலை எதிர்கொண்டுள்ளோம். குறிப்பாக தமிழர்கள் தொடர்ச்சியாக துன்புறுத்தப் படுவதும் , வாழ்விடங்கள் கபளீகரம் செய்யப்படும் செயல்பாடு அதி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

வட, கிழக்கில் பழம்பெரும் ஆலயங்கள்,பௌத்த தேவாலயங்களாக மாற்றப்படுவதும் அங்கு அரசபடையினர் குவிக் கப்படுவதும் அங்குள்ள எமது மக்கள் தொடர்ச்சியாக துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கபடும் சூழலில்தான் சிவில் அமைப்புக்கள் இந்த போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். வட, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் எமது மக்கள் ஆதரவை வழங்குவதன் மூலம், எமது ஒருமித்த குரலாக எதிர்ப்பை சர்வதேசத்திற்கு காட்டுவோம் - என்றார். (ஐ)




காலை
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்
பகல்
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் வரலாறு
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள் கணிதம்



# முல்லைத்தீவில் பெரமுன கட்சியின் நான்காம் ஆண்டு நிறைவு நிகழ்வு

முல்லைத்தீவு, பெப். 02

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நான்காவது வருட பூர்த்தியை முன்னிட்டு, முல்லைத்தீவு மாவட்ட இளைஞர், யுவதிகளின் மாநாடும் முல்லைத்தீவு தொகுதிக்கான சம்மேளனக் கூட்டமும், முல்லைத்தீவு நகர பிரதேச சபை மண்டபத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் தலைமையில் நடைபெற்றது.

இதில், ஆளும் கட்சியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெயரத்ன ஹேரத் கலந்துகொண்டார். அவருடன், முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.கனகரத்தினம், முல்லைத்தீவு தொகுதிக்கான செயற்குழு உறுப்பினர்கள், முல்லைத்தீவு பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# கம்பஹாவில் மணமகளுக்கு தொற்று

கொழும்பு, பெப். 02

மணமகளுக்கு கொரோனா தொற்று உறுதியானமையால் 35 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது. கம்பஹாவின் மினுவாங்கொடையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருமணத்திற்கலக பொருட்கள் வாங்குவதற்கு மினுவாங்கொடையிலுள்ள கடை ஒன்றுக்கு மணமகள் சென்றபோது அவருக்கு தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சுகாதார அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# எமது மரபுரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பை எம்மிடமே தாருங்கள்

## யாழ். மாநகர சபை கோரிக்கை



யாழ்ப்பாணம்,பெப்.02

**யாழ். மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட இடங்களிலுள்ள தமிழர்களின் மரபுரிமை சின்னங்களை பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக மாநகர முதல்வருக்கும் தொல்பொருள் திணைக்களத்திற்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.**

எமது வரலாறுகளை அடுத்த சந்ததிக்கு கடத்துவதற்கு ஏதுவான வகையிலும் எங்களுடைய ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள மரபுரிமைச் சின்னங்களை நாமே பாதுகாக்கும் நோக்குடனும் அவற்றைப் பாதுகாக்கும் - பராமரிக்கும் பொறுப்பை எம்மிடம் வழங்க வேண்டும் என்று இதன்போது தொல்பொருள் திணைக்கள அதிகாரியிடம் முதல்வர் அவர்கள் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன், இந்த மரபுரிமை சின்னங்களை முழுமையாகக் கையளிக்காது விடினும் ஒப்பந்த அடிப்படையிலேனும் பாதுகாக்கும் உரிமையை வழங்குமாறும் அவர் இதன்போது கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதில் அளித்த, தொல்பொருள் திணைக்கள அதிகாரி இது தொடர்பில் கோரிக்கை கடிதம் ஒன்றைத் தருமாறும் அதற்குரிய அனுமதிக்கு முயற்சிப்பதாகவும் கூறினார்.

முக்கியமாக சங்கிலியன் அரண்மனை, சங்கிலியன் தோப்பு மற்றும் வளைவு, யமுனா ஏரி ஆகிய தமிழர் மரவுரிமைச்சின்னங்களை பாதுகாத்து பாராமரிப்பது தொடர்பில் யாழ்.மாநகர சபையும் தொல்பொருள் திணைக்களமும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவது குறித்தும் கலந்துரையாடப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது.

அத்துடன் குறித்த இடங்களில் அவ் மரபுரிமை சின்னங்களின் வரலாற்றை மூன்று மொழிகளிலும் இடுவது தொடர்பிலும் ஆராயப்பட்டு முடிவு செய்யப்பட்டது.

கலந்துரையாடல் முடிவின் பின்னர், இதில் பங்கேற்றவர்கள் யாழ்.கோட்டை, யமுனா ஏரி, சங்கிலியன் அரண்மனை, சங்கிலியன் தோப்பு ஆகிய இடங்களை நேரில் பார்வையிட்டு எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர்.

(ஐ- 3)

அமெரிக்க வெளியுறவு செயலருக்கு:

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று கடிதம்!

வவுனியா,பெப்.2

மனித உரிமைகள் பேரவையில் எமது ஆலோசனைகளையும் ஆதரிக்க வேண்டும் என்று கோரி வவுனியாவில் தொடர் போராட்டத்தை நடத்தி வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அமெரிக்க வெளியுறவு செயலர் அன்ரனி பிளிங்கினுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

1445ஆவது போராட்ட நாளான நேற்று அவர்கள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

புதிய அமெரிக்க வெளியுறவு செயலர் அன்ரனி பிளிங்கினுக்கு நாங்கள் ஒரு கடிதம் எழுதியுள்ளோம். அதில், 8 ஆண்டுகளாக ஐ.நா. மனித உரிமைகள் பேர வையில் தமிழர்களை ஆதரித்தமைக்கு அமெரிக்கா நாட்டுக்கு நன்றி தெரிவித்தோம். இம்முறை மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின்போது எங்களின் ஆலோசனைகளையும் ஆதரிக்கும்படி கோரியுள்ளோம்.

இதன் அடிப்படையில், இலங்கையின் போர்க்குற்றம், தமிழ் இனப்படுகொலை மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கான சர்வதேச குற்றவியல் விசாரணைகளுக்கு ஐ.சி.சி. அல்லது இலங்கை தீர்ப்பாயத்தின் தேவை தொடர்பிலும், சிங்களவர்களின் எதிர்கால ஆக்கிரமிப்பு, தாக்குதலில் இருந்து தமிழர்களைப் பாதுகாக்க, எங்களுக்கு அரசியல் தீர்வை நிர்ணயிப்பதற்கான வாக்கெடுப்பின் அவசியம் தொடர்பிலும், இலங்கையில் சிரியா அல்லது மியன்மர் பாணி விசாரணைக்கு நாங்கள் கோரியமை,நமது தாயகத்தில் கொடூரமான இலங்கை இராணுவத்தை அகற்ற ஐ.நா அமைதிகாக்கும் படையை அனுப்புதல் இவை நிறைவடையும் வரை அல்லது தொடங்கப்படும் வரை மனித உரிமைகள் பேரவை ஒய்வெடுக்கக்கூடாது என்று நாங்கள் விரும்புகிறோம்.

மனித உரிமைகள் பேரவை தொடர்பான விடயங்களில் சுமந்திரன் ஏன் வந்தார் என்பது எங்களுக்குத் தெரியாது. சர்வதேச விசாரணை முடிந்து விட்டது, இனப்படுகொலை எதுவும் நடக்கவில்லை என்பது போன்ற பொய்களை அவர் தொடர்ந்து சொன்னார், இலங்கை தனது நாடு என்று அவர் கருதுகிறார். எனவே, அவர் இலங்கைக்கு எதிராக செல்ல முடியாது என்றும் கூறியிருக்கிறார்.

# 2,694 பேர் வடக்கு மாகாணத்தில் நேற்று தடுப்பூசியைப் பெற்றனர்!

## ஏனையோருக்கு இன்று மட்டுமே சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், பெப். 02

வடக்கு மாகாணத்தில் தடுப்பூசி செலுத்தப்படும் மூன்றாம் நாளான நேற்று 2 ஆயிரத்து 694 பேர் பெற்றுக்கொண்டனர், என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த மூன்று நாள்களில் வடக்கு மாகாணத்தில் 7 ஆயிரத்து 221 மருத்துவ சேவையாளர்கள் மற்றும் சுகாதார துறையினர் கொவிட் -19 தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். இது மொத்த உத்தியோகத்தர்கள் எண்ணிக்கையில் 73 சதவீதமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் கொவிட் -19 தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

இந்த தடுப்பூசி மருந்து வழங்கலுக்கு வடக்கு மாகாணத்தில் 9 ஆயிரத்து 944 சுகாதாரத்துறை சேவையாளர்கள் தகுதி பெற்றனர். இந்தப் பணியில் முதல் நாளன்று 2 ஆயிரத்து 997 பேர் கோவிட் -19 தடுப்பூசி மருந்தைப் பெற்றனர். இது 30 சதவீதமாகும்.

இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 530 சுகாதார சேவையாளர்கள் கொவிட் -19 தடுப்பூசி மருந்தைப் பெற்றனர்.

மூன்றாம் நாளான நேற்று வடக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்து 694 பேர் கோவிட் -19 தடுப்பூசி மருந்தைப் பெற்றனர்.

இதில், யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 388 பேரும், கிளிநொச்சியில் 370 பேரும், மன்னாரில் 332 பேரும், வவுனியாவில் 350 பேரும், முல்லைத்தீவில் 284 பேரும் தடுப்பூசியை ஏற்றிகனர்.

இதுவரை 73 சதவீத சேவையாளர்கள் மட்டுமே தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பவதிகள் மற்றும் கர்ப்பம் தரிக்க காத்திருப்போர் என மூன்று வகையினரை இந்த தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டது.

அதனால் அவ்வாறானவர்கள் தவிர்ந்த ஏனைய அனைவரும் கொவிட் -19 தடுப்பூசியைப் பெற இன்று ஒருநாள் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

(ஐ)

# பருத்தித்துறை பொதுச் சந்தை நேற்று வழமைக்கு திரும்பியது!

வடமராட்சி, பெப். 02

பருத்தித்துறை பொதுச் சந்தை நேற்று முதல் தனது இடத்தில் மீண்டும் வழக்கம்போன்று இயங்க ஆரம்பித்துள்ளது.

கொரோனா தொற்று அச்சம் காரணமாக கடந்த டிசெம்பர் முற்பகுதியில் வடக்கு மாகாணத்தின் அனைத்து சந்தைகளும் மூடப்பட்டன. இந்நிலையில் கடந்த ஜனவரி 18ஆம் திகதி முதல் அனைத்து சந்தைகளும் மீள இயங்க ஆரம்பித்தன.

ஆனால், அச்சமயம் பருத்தித்துறையில் இரு கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். இதையடுத்து அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த சுமார் 80 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். இவர்களில் சிலர் பருத்தித்துறை பொதுச் சந்தையுடன் தொடர்புபட்டவர்கள் என்பதால், சந்தையை மீள ஆரம்பிப்பதில் சிக்கல் ஏற்பட்டது.

இந்நிலையில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு அண்மையில் எடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து நேற்றுமுதல் சந்தையை இயக்க அனுமதி அளிக்கப்பட்டது.

இந்நிலையில், சுகாதார விதிகளை அனுசரித்து நேற்று முதல் பருத்தித்துறை பொதுச் சந்தை மீளவும் இயங்க ஆரம்பித்துள்ளது.

(ஐ-2)

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 13312 \| வே \|1983<br>குரும்பசிட்டி \| இந்து \| செவ் : 08<br>Software Engineer \| Germany<br>மகம்(சிம்மம்) \| 174செ.மீ | 13172 \| வே \|1984<br>இணுவில் \| இந்து \|<br>Area Inspector \| Sri lanka \|<br>ஆயிலியம்(கடகம்) \|160செ.மீ |
| 13500 \| வே \|1984<br>வல்வெட்டி \| இந்து \| UK \|<br>Working in shop \| லக்.செவ்<br>திருவோணம்(மகரம்) \| 165செ.மீ | 13130 \| வே \|1985<br>Divorced \| யாழ்நகரம் \| இந்து<br>Sri Lanka \| N/A<br>உத்திரட்டாதி(மீனம்) \| 163செ.மீ |
| 13900 \| வே \|1984<br>அரியாலை \| இந்து \| செவ் : 02<br>It Company \| Australia<br>அனுஷம்(விருச்சிகம்) \| 155செ.மீ | 13822 \| ப \|1987<br>பொலிகண்டி \| இந்து \| Switzerland<br>பூராடம்(தனுசு) \| 160செ.மீ<br>Assistant Auditor \| செவ் : 01 |
| 13858 \| வே \|1984<br>கந்தரமடம் \| இந்து<br>Senior Network Engineeer<br>Singapore \| கேட்டை (விருச்சிகம்)<br>155செ.மீ | 13476 \| வே \|1987<br>தெல்லிப்பளை \| இந்து \|<br>Marine Officer \| Sri Lanka \|<br>மூலம்(தனுசு) \| 168செ.மீ |
| 13115 \| வே \|1984<br>கந்தரமடம் \| இந்து \|<br>Software Engineer \| Sri Lanka \|<br>சுவாதி(துலாம்) \| 168செ.மீ | 13970 \| வே \|1987<br>Divorced \| சுழிபுரம் \| இந்து<br>Researcher \| Oman<br>கு.செவ் : 09 \| 153செ.மீ<br>ஆயிலியம்(கடகம்) |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.02.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூார்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - நேரலை



5.30 மணி : டேக் இட் ஈஸி
6.00 மணி : ட்றெய்லர் டைம்




6.30 மணி : மூவி டோக்கீஸ்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி TV CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதசரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் வரலாறு
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள் கணிதம்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் அராலி முத்துமாரியம்மன் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்